Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

ராம்கோ

MADRAS CEMENTS LTD


RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

(C/1105)


முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 27 செவ்வாய்க்கிழமை (13.12.2011) பக்கங்கள் 16 ஓசை – 73



அணியில் தாக்கம் 07

NPD Die Nationalen

கட்சிக்கு எதிர்ப்பு 13



நீதியால் கவலை 08



வலுவிழந்தோருக்கு முதன்மை! 04

## சிறுமி துஷ்பிரயோகம் இளைஞர் கைது

(யாழ்ப்பாணம்)

பாடசாலைச் சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகத் தெரிவித்து இளைஞர் ஒருவரை யாழ்.பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை கொழும்புத்துறைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா பாடசாலையொன்றில் தரம்-10 இல் கல்வி கற்கும் குறித்த மாணவி தனது சகோதரி வீட்டுக்குப் பாடசாலை விடுமுறையைக் கழிப்பதற்காக வந்து தங்கியுள்ளார். நேற்றைய தினம் குறித்த மாணவியின் சகோதரி வெளி இடத்துக்குச் சென்றிருந்த வேளை குறித்த மாணவியுடன் இளைஞன் இருந்துள்ளார். இதனால் இருவரது நடத்தை மீது சந்தேகம் கொண்ட அயலவர்கள் இளைஞரைப் பிடித்து யாழ். பொலிஸாரிடம் ஒப்படைந்துள்ளனர்.

மேற்படி குற்றம் சாட்டப்பட்ட இளைஞன், அம்மாணவி தன் காதலி எனப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். எனினும், பொலிஸார் இவ்விளைஞன் மீது வயது குறைந்த மாணவியுடன் இருந்ததாக சிறுவர் துஷ்பிரயோக வழக்கில் முறைப்பாட்டில் பதிந்துள்ளனர்.

மேற்படி இளைஞன் இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எப்.எஸ்)

# சகல கட்சிகளதும் பங்களிக்காமல் தீர்வொன்றினை எட்ட முடியாது

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியல் உரிமைப் பிரச்சினை தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மட்டும் பேசித் தீர்வுகாண முடியாது என்பதுடன் இதற்கு சகல கட்சிகளினதும் ஆதரவும், பங்களிப்பும் முக்கியமானது என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அமைச்சரின் வாசஸ்தலத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் பொருட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மட்டும் பேசி நிந்தரமான தீர்வை எட்ட முடியாது. இதற்கு ஏனைய தமிழ்க் கட்சிகள் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவும் பங்களிப்பும் ஒத்துழைப்பும் முக்கியமானது.

அந்தவகையில் சகல தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைக்கும் பட்சத்தில் அது தொடர்பில் ஆராய்ந்து அதனை நடைமுறைப் படுத்துவதற்கு தயாராக இருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ என்னிடம் தெரிவித்துள்ளார்.

என்வே சகல தமிழ் அரசியல் கட்சிகளும் சரியானதும் நிரந்தரமானதுமான அரசியல் தீர்வுக்காக ஒன்றிணைந்து வலுச்சேர்க்க வேண்டும். அந்தவகையில்

(15ஆம் பக்கம் பார்க்க)

# குடிமக்களின் விபரங்களை திரட்டவுள்ளது இராணுவம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து மக்களினதும் விபரங்களைத் திரட்டும் நடவடிக்கை ஒன்றை இராணுவம் மேற்கொள்ளவுள்ளது.

புவிசார் குடிமக்கள் தகவல் முறைமைத் திட்டம் என்ற பெயரில் இராணுவம் 2.5 மில்லியன் ரூபா செலவில் இந்தத் தகவல்களை திரட்டவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் மேற்பார்வையின் கீழ், ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான நிலையமும் இராணுவமும் இணைந்து இந்த தகவல் திரட்டும் நடவடிக்கையை மேற்கொள்ள வுள்ளன.

வாழும் அனைத்துக் குடிமக்கள் பற்றிய தகவல்களையும் எண்முறை அடிப்படையில் உருவாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்தத் திட்டம் தற்போது கம்பகா மாவட்டத்தில் முன்னோடியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகஇராணுவத்தின் தகவல் தொழில்நுட்ப ஆலோசகரும், ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் தலைவருமான கேணல் திரான் டி சில்வா

(15ஆம் பக்கம் பார்க்க)

## கனேடிய வதிவிடப் பிரதிநிதிகள் யாழ்.ஆயருடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். மறைமாவட்ட ஆயருக்கும் இலங்கைக்கான கனேடிய வதிவிடப் பிரதிநிதிகளுக்கும் இடையில் யாழ். ஆயர் இல்லத்தில் நேற்றைய தினம் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இச்சந்திப்பின் போது இலங்கை அரசினால் வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீள்குடியேற்றம், மக்கள் மயப்பட்ட அபிவிருத்திப் பணிகள் மற்றும் கல்வி, சுகாதார சேவைகள் (15ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைமீறல் தொடருமாயின் சர்வதேசம் நேரடியாக தலையிடும்

### எச்சரிக்கிறது ஐ.தே.க.


(கொழும்பு)

நாட்டில் தொடர்ச்சியாக மனித உரிமை மீறல்கள் இடம்பெறுமாயின் சர்வதேசம் நேரடியாக இலங்கைக்குள் தலையிடும் அபாயம் இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

அரசாங்கம் நினைத்தவிதத்தில் எல்லாம் சட்டதிட்டங்களை

(15ஆம் பக்கம் பார்க்க)

## இனங்களுக்கிடையில் புரிந்துணர்வு இலங்கையில் அவசியமானது



(கொழும்பு)

இலங்கையில் மீளவும் பயங்கரவாதம் தலைதூக்காமல் இருப்பதற்கு இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வும், அரசியல் ஒற்றுமையும் அவசியமானதென ஐரோப்பிய நாடாளுமன்ற பாதுகாப்புத்துறைத் தலைவர் ஜெப்ரி வேன் வோர்டன் தெரிவித்துள்ளார்.

தனது இலங்கை விஜயத்தின் அனுபவங்களை நினைவு (15ஆம் பக்கம் பார்க்க)

## மதகுருவுக்கு பொருத்தமற்ற விதத்தில் செயற்படுகின்றார் இமானுவேல்

### கண்டிக்கிறார் பேராயர் மல்கம் ரஞ்சித்

(கொழும்பு)

எந்தவொரு மதகுருமாருக்கும் கட்சி அரசியல் பொருத்தமற்றது எனவும், அவர்கள் கட்சி அரசியலிலும், அரசியல் பிரச்சினைகளிலும் தம்மை ஈடுபடுத்த முடியாது எனவும் கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் கர்டினால் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மறை மாவட்டத்திலிருந்து மதகுரு ஒருவருக்கு பொருத்தமற்ற விதத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அருட்தந்தை எஸ்.ஜே. இமானுவேலின் செயற்பாடுகள் ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஞானார்த்த பிரதீபய என்ற பத்திரிகைக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ள அவர்

(15ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை முன்னிறுத்த முயற்சி

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையை சர்வதேசத்தின் குற்றவியல் நீதிமன்றத்தின் முன்நிறுத்த ஐ.நா.உட்பட பல சர்வதேச நாடுகள் முயன்று வருகின்றன. எனவே நவநீதம்பிள்ளை போன்றவர்களை நாட்டுக்குள் அனுமதிக்கக் கூடாது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை எத்தகைய தன்மையினை கொண்டிருந்தாலும் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் முன் நிறுத்துவதே ஐ.நா. உள்ளிட்ட மேற்குலக சக்திகளின் நோக்கமாகும்.


எனவே நவநீதம்பிள்ளை போன்றவர்களை நாட்டுக்குள் அரசு அனுமதிக்கக் கூடாது.

நாட்டிற்கு எதிரான சர்வதேச செயற்பாடுகள் தீவிரம் கண்டுள்ளன. இன்று இலங்கையை ஏதாவது வழியில் போர்க்குற்ற விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று அமெரிக்கா, ஐ.நா. மற்றும் கனடா போன்ற நாடுகள் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

இந்த சவாலை அரசாங்கம்

(15ஆம் பக்கம் பார்க்க)

# எக்ஸ் கதிர் இயந்திரம் விரைவில் வருகிறது



(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் எக்ஸ்ரே பிரிவின் செயற்பாட்டை வழமைக்குக் கொண்டுவரும் முயற்சியாக நவீன எக்ஸ்ரே இயந்திரமொன்று கொழும்பிலிருந்து இன்னும் சில தினங்களில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப் படவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்றைய தினம் இவ் எக்ஸ்ரே இயந்திரத்தினை கொழும்பிலிருந்து எடுத்துவருவதற்காக விசேட வாகன மற்றும் ஆளணியினர் கொழும்பு விரைந்திருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

ஏற்கனவே யாழ். போதனா வைத்தியசாலையின் எக்ஸ்ரே பிரிவில் 3 எக்ஸ்ரே படம் எடுக்கும் இயந்திரங்கள் சேவையில் ஈடுபட்டிருந்தன. அவற்றில் 2 பழுதடைந்து போயுள்ளன.

அவற்றில் ஒன்று முற்றாகப் பயன்படுத்த முடியாமல் பழுதடைந்து போயுள்ளது. மற்றைய பழுதடைந்த இயந்திரத்திற்குப் பதிலாகவே குறித்த இயந்திரம் எடுத்துவரப்படவிருக்கின்றது.

தற்சமயம் ஒரு இயந்திரம் மட்டுமே தொழிற்பட்டு வருகின்றது. இதன் மூலமாக வைத்தியசாலை விடுதியில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே எக்ஸ்ரே சேவை வழங்கப்பட்டு வருவதாகவும், கிளினிக் நோயாளர்களுக்கு அதனை வழங்க முடியாதுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்சமயம் கொழும்பிலிருந்து எடுத்துவரப்படவுள்ள எக்ஸ்ரே இயந்திரம் சுகாதார அமைச்சினால் பயன்படுத்தப்பட்டிருந்த இயந்திரம் எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பா)

# யாழ். சுமங்கலி விடுதி வழக்கு உரிமையாளருக்கு பிணை மறுப்பு


(யாழ்ப்பாணம்)

பாலியல் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்காக யாழ். நகர் சுமங்கலி விடுதி உரிமையாளர் மீதான வழக்கு விசாரணை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன், குற்றவாளிகளில் மேலும் ஒருவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. எனினும் விடுதி உரிமையாளர் தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்றைய தினம் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவினால் இவ்வழக்கு எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதுடன், குற்றவாளியாகிய இளைஞருக்கு பிணை வழங்க அனுமதி வழங்கினார்.

மேலும் இவ்வழக்கில் குறித்த விடுதியின் நடத்துனர், முகாமையாளர், ஓட்டோ சாரதி ஆகியோர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். (பா)

# தொலைபேசி சேவை இன்று முதல் வழமைக்கு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ரெலிகொம் நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கிய கேபிள் தொலைபேசி இணைப்புக்களில் 2 ஆயிரம் இணைப்புக்கள் நேற்று முன்தினம் முதல் செயலிழந்துள்ளதாக யாழ். ரெலிகொம் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் திடீரென ஏற்பட்ட இடி மின்னலை அடுத்தே இத்தொலைபேசி இணைப்புக்கள் செயலிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் ஏற்பட்ட இடி மின்னலை அடுத்து யாழ்ப்பாணம் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் ஏற்பட்ட தாக்கத்தையடுத்தே தொலைபேசிகள் செயலிழந்துள்ளன.

செயலிழந்துள்ள தொலைபேசி இணைப்புக்களை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வரும் முயற்சிகளில் யாழ். ரெலிகொம் நிறுவனம் ஈடுபட்டுள்ளதாகவும் பெரும்பாலும் செயலிழந்துள்ள தொலைபேசி இணைப்புக்கள் மீண்டும் இன்று முதல் இயங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# புதுக்குடியிருப்பில் அநாதரவான பழம்பெரும் இந்து ஆலயம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதியிலுள்ள இந்து ஆலயம் ஒன்று பூசை வழிபாடுகள் இல்லாத நிலையில் காணப்படுகிறது.

கோம்பாவில் கிராமத்தில் ஒரு நாற்சந்தியின் நடுவில் அமைந்துள்ள காட்டாமணக்கு ஸ்ரீ விநாயகர் ஆலயமே இவ்வாறு பூசைகள் எதுவுமற்று காட்சியளிக்கிறது.

மேற்படி ஆலயம் கதவுகள் எதுவுமற்று காணப்படுவதோடு, மீள்குடியேற்றம் நடைபெற்று 6 மாதங்கள் கழிந்துவிட்ட நிலையிலும், பாலஸ்தானம் எதுவும் செய்யப்படாது, அந்தணர் அற்ற நிலையில் இவ் ஆலயம் அநாதரவாகக் காணப்படுகிறது.

இப்பிரதேசத்தில் இரு விநாயகர் ஆலயங்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருப்பதால், விநாயக வழிபாடு செய்வதில் இக்கிராம மக்கள் பெரிதும் அல்லற்படுவதாகத் தெரியவருகிறது.

எனினும் அந்தணர் இல்லாத நிலையிலும் மக்கள் கோவிலுனுள் சென்று பூக்கள் தூவி, பொங்கிப் படையலிட்டு வழிபாடு செய்து வருகின்றனர். (அ.ப)

## தேங்காய் திருட்டு

(யாழ்ப்பாணம்)

பலசரக்கு கடையொன்றிலிருந்து பலர் பார்த்திருக்க தேங்காய் அடங்கிய பொதி களவாடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் யாழ். ஐந்து சந்தியில் உள்ள பலசரக்கு கடையில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த கடையில் வாடிக்கையாளர்களின் அவசரத் தேவையினால் கடை உரிமையாளர் பொருட்களை எடுக்கும் ஆர்வத்தில் இருந்தவேளை கடைக்கு முன்னால் இருந்த தேங்காய்ப் பொதி களவாடப்பட்டுள்ளது. (எப்.எஸ்)

# ஹாட்லி பழைய மாணவர் மன்றம் புதிய கட்டடத்திற்கு அடிக்கல்





(யாழ்ப்பாணம்)

ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் மன்ற அலுவலகம் மற்றும் சிற்றுண்டிச் சாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு பெருமளவில் திரண்டிருந்த பழைய மாணவர்கள் முன்னிலையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

பழைய மாணவர் மன்ற பிரித்தானிய கிளையின் நிதிப் பங்களிப்புடன் இடம்பெறும் இவ் இரண்டு மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல்லை சமய சம்பிரதாயங்களைத் தொடர்ந்து பழைய மாணவர் மன்ற தாய்ச் சங்கத்தின் தலைவர் மு.சிவநேசன், ஹாட்லிக் கல்லூரி அதிபர் தெய்வேந்திரராஜாவுடன் இணைந்து நாட்டி வைத்தார்.

தொடர்ந்து இடம்பெற்ற பழைய மாணவர்களுக்கான தேநீர் விருந்தில் உரையாற்றிய தலைவர், கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள பழைய மாணர்களை பெரிதும் பாராட்டியதுடன், பழைய மாணவர் மன்ற செயற்பாடுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க அணிதிரளுமாறு பழைய மாணவர்களைக் கேட்டுக்கொண்டார்.

மேலும் எதிர்வரும் 24 ஆம் திகதி இடம்பெறவுள்ள பழைய மாணவர்களுக்கான ஒன்றுகூடலில் பங்குபற்றுமாறு ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவருக்கும் கோரிக்கை விடுத்தார்.

# வடக்கு ஊடகவியலாளர்களுடன் அமைச்சர் கஜதீர சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய ஊடகவியலாளர்களுக்கும், சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் புனருத்தாபன அமைச்சர் சந்திரசிறி கஜதீரவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் மாலை 3.30 மணிக்கு ஆரம்பமானது.

யாழ். ரில்கோ சிற்றி ஹோட்டலில் இடம்பெற்ற இச்சந்திப்பில் அமைச்சர் ஊடகவியலாளர்களிடம் சிநேகபூர்வமான உறவினைப் பேணவேண்டும் எனவும், இவ் உறவுகளை பேணுவதற்கு அடிப்படையான செயற்திட்டங்களை தாம் ஏற்பாடு செய்து தருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் ஊடகவியலாளருக்குத் தேவையான கருவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார். இச்சந்திப்பு அரை மணித்தியாலங்கள் இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது யாழ். பிராந்திய அச்சு மற்றும் இலத்திரனியல் சார்ந்த ஊடகவியலாளர்கள் பலரும் பிரசன்னமாயிருந்தனர். (எப்.எஸ்)


## யாழ்ப்பாணம் மாநகரசபை

### ஆதனவரி அறிவித்தல் - 2011

2011 ஆம் ஆண்டு நான்காம் கந்தாயத்திற்கான ஆதனவரியினை 2011.12.30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முன்பதாக எவ்வித தண்டமும் இன்றி இவ்அலுவலகத்தில் செலுத்தலாமெனவும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப் பணத்திற்கு மேலதிகமாக கீழ்க்குறிப்பிடப்படும் விபரப்படி வெலியாற்றுப்பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் - 15%
ஏனைய காணிகள் - 20%

நிலுவை உட்பட 2011 ஆம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நிலுவைத் தொகையினைச் செலுத்தாத பட்சத்தில் மாநகரசபைக் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252: பிரிவு XII 252(I) இன்படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

காசோலையாகச் செலுத்துவோர் 'மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்' என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி. யோ.பற்குணராசா
முதல்வர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம். (C/1115)



## அருள்ஞான ஜோதிடம்

அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடப்பது, நடக்கப்போவது இவற்றுடன் எனது அருள் ஞான ஜாதகக் கணிப்பினால் மை வெளிச்சம் போல் உங்கள் வாழ்க்கையைத் தெரிந்துகொள்ளலாம். அத்துடன் ஒருவர் என்னிடம் 4 ஜாதகங்களுக்கு மேல் கணிப்பு செய்து எடுத்தால் Gem Cooperation உத்தரவாதக் கடிதத்துடன் அவர்களுக்கு அதிஷ்டம் தரக்கூடிய அதிஷ்டக் கல்லை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.தேசப்பந்து, பேராசிரியர். P.K.சாமி J.P.ஐயா. ஸ்ரீ துர்க்காதேவி அருள் சக்தி இல்லம், இல. 23, மேபீல்ட் வீதி, கொழும்பு - 13. 011234263/64. (வீண் அலைச்சலை தவிர்க்க முன கூட்டியே அறிவித்து, அந்த நேரத்தில் மாத்திரம் வரவும். (C/1102)

நல்ல காரியங்களைச் செய்ய ஒருபோதும் பயப்படாதீர்கள்! தாமதமின்றி உடனே நல்ல காரியங்களைச் செய்யுங்கள்!

- நெப்பொலியன் ஹில்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## பின்தொடரும் துரோகபுராணம்!

மூன்று கட்சிகளின் கூட்டான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள், அதைக் கட்சியாகப் பதிவு செய்துகொள்ள வேண்டும், வேண்டாம் என்பதில் முன்னாள் ஆயுதக்குழு அணிக்கும் அகிம்சைக்குழுவாகத் தம்மைச் சொல்லிக்கொள்ளும் அணிக்குமிடையே கயிறிழுத்தல் நடந்து வருவது தமிழ்மக்கள் எல்லோருக்கும் தெரிந்ததே.

மக்களைக் கொலை செய்த மண்டையன் குழுத் தலைவர் என ஆயுதக்குழு அணித்தலைவரை மாவையார் திட்டுவதும், இவர்கள் அவரை மஞ்சள் பைக்குள்ளே தமிழரசுக் கட்சிக்கு ஆள் சேர்க்கிற துண்டுப் பேப்பர்களுடன் திரிகிறார் என்று திட்டுவதுமாக அந்த 'ஐக்கியம்' ஒருபுறம் களைகட்டுகிறது என்றால், மறுபுறம் கூட்டமைப்புக்குள் உள்ள கட்சிசாரா எம்பிக்களும் தங்களுக்குள் ஏதோ 'கணகண்ப்பில்' இருப்பதாகச் செய்தி வெளிவருகிறது.

நேற்று கூட்டமைப்பு எம்பியின் அந்தப் பேப்பரில் மட்டும் புதிய 'குடுமிப்பிடி' ஒன்று அரங்கேறியிருப்பதைக் காண முடிந்தது. அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியை ஐ.தே.க. மாற்றுக்குழு, ஐ.தே.மு. ஆகியவை புறக்கணித்திருந்த நிலையில், கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அந்தப் போட்டியில் விளையாடியிருந்தார் என கூட்டமைப்பு எம்பியின் பத்திரிகையே செய்தியை வெளியாக்கியிருந்தது.

செய்தியை மட்டும் வெளியிட்டதுடன் நிறுத்தவில்லை. அதைக் கண்டித்து மற்றொரு கூட்டமைப்பு எம்பியின் பெயரில் ஆவேசச் செய்தியொன்றையும் அதற்குக் கீழேயே போட்டு சிண்டு முடிந்திருந்தது. "தமிழ் மக்களைப் பந்தாடும் அரசுடன் நாம் கிரிக்கெட் பந்து விளையாடலாமா?" என்பதே அந்த கிழக்கு மாகாண கூட்டமைப்பு எம்பியின் தர்மாவேசம்!

அவரது இந்த ஆவேசமோ அல்லது சுமந்திரன் எம்பி கிரிக்கெட் விளையாடியதோ வேறெந்தப் பத்திரிகைகளிலும் செய்தியாக வந்திருக்கவில்லை. கூட்டமைப்பு எம்பியின் பத்திரிகையே செய்தியையும் போட்டு, இவர் அரசாங்க அமைச்சர்கள் எம்பிக்களுடன் சேர்ந்து விளையாடப் போகலாமா என்ற ஆவேசத்தையும் பெற்றுப் போட்டிருக்கிறது.

யாழ்ப்பாணக் கூட்டமைப்புப் பத்திரிகை எம்பியும் கிழக்கு கூட்டமைப்பு எம்பியும் யாழ் பத்திரிகையை கிழக்கிலும் தொடங்குவதற்கான கூட்டாலோசனை நடத்தி வருபவர்கள் எனச் சொல்லப்படுகிறது. இருவரும் பேசிவைத்து தேசியப்பட்டியல் எம்பியைக் 'காய்ச்சி'யிருப்பதற்கு, இந்த மூன்றாவது அணிக்கும் அவர் முட்டுக்கட்டையாக இருப்பதுதான் காரணம் என்றும் சொல்லப்படுகிறது. வரவிருக்கும் மாகாண சபைத் தேர்தலுக்கான நகர்த்துதல்களில் இவர்களுக்கு அவர் வில்லனாகியிருப்பதாகக் கேள்வி.

அது எப்படியுமிருக்கட்டும், அரசாங்க அமைச்சர்கள், எம்பிக்களுடன் சேர்ந்து கிரிக்கெட் விளையாடியதில் 'தமிழ்த் தேசியக் கற்பு' எவ்விதம் கறைப்பட்டுப் போனதென்று இவர்கள் கதறுகிறார்கள் என்பதைத்தான் விளங்கிக்கொள்ள முடியவில்லை. பின்கதவால் பிள்ளைக்கு ஸ்கொலர்ஷிப்பும், பத்திரிகைக்கு விளம்பரங்களும், வியாபார ஒப்பந்தங்களும் அனுசரணைகளும் கேட்டு வாங்கும்போது கெடாத கற்பு கிரிக்கெட் விளையாடினால்தான் கெட்டுப் போகிறதா?

இவ்வாறு உணர்ச்சிகரமாகப் பேசியே தங்களது எதிர்த்தரப்புகளைத் துரோகிகளாய்க் காட்டிவரும் இவர்கள் அதன் நீட்சியாக தங்களுக்குள்ளேயும் 'துரோக புராணத்தை' பாடித் தொடர்கிறார்கள். அரசதரப்பினருடன் தங்கள் தேவைகளுக்காக இவர்கள் சிரித்துக் குழைந்து நெளிவதெல்லாம் மக்களுக்குத் தெரியாது என்பதுபோல் அரசாங்கத்தாருடன் பேசுவதே துரோகம் என்கிறவிதமாக உணர்ச்சியாவேசத்தை மக்களுக்கு விசிறியடிக்கிறார்கள்.

இந்த நாட்டில் பிரச்சினை தீர்ந்து வாழலாம் என்ற நம்பிக்கையே மக்களுக்கு வந்துவிடக் கூடாது என்கிற கவனத்தோடு, அரசு மீதான எதிர்ப்பைத் தொடர்ந்து விசிறி விட்டபடி யதார்த்தத்தை மறைக்கும் 'வீரப்பேச்சுகளில்' மயக்கமூட்டி வருகிறார்கள். அவர்களோடு விளையாடக்கூடாது, பழகக் கூடாது, பேசக் கூடாது என்ற வெறுப்பை விநியோகித்தபடி தீர்வைப் பேசிக் காண்பதெப்படி?

மக்களது கஷ்டங்களுக்கு ஒரு மாற்றும் காணாது, எதிர்கால நம்பிக்கையும் காட்டாது உணர்ச்சியரசியலைப் பேசிப் பேசியே உயிர்களை வாங்கிக் கொண்டிருப்பதை நிறுத்தி, என்றாவது உருப்படியான எதையேனும் சொல்வார்களா இவர்கள்?

- ஆசிரியர்

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு எதிராக முல்லைத்தீவு மாணவி வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

பல்வைத்திய விஞ்ஞானப் பட்டப்படிப்பைத் தொடர அனுமதிக்கப்படாமைக்கு எதிராக முல்லைத்தீவைச் சேர்ந்த மாணவியொருவர் தொடுத்த வழககில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக குழுவையும் ஏனைய இரு பிரதிவாதிகளையும் ஜனவரி 10 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா (தலைவர்) எச்.என்.ஜே. பெரேரா ஆகியோரடங்கிய நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

முல்லைத்தீவைச் சொந்த இடமாகக்கொண்ட அனுஜா யோகநாதன் எனும் இம்மாணவி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, அதன் மேலதிக செயலார் டாக்டர் பிரியந்த பிரேமகுமார, பல்கலைக்கழக பல்வைத்திய விஞ்ஞானப் பிரிவுக்குத் தெரிவான பரீட்சார்த்தியான வி.ஜயவதனி ஆகியோரை அவர் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவைச் சொந்த இடமாகக் கொண்டதான் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்றவகையில் பல்கலைக்கழகத்தில் பல்மருத்துவப் பட்டப்படிப்பைத் தொடர்வதற்கு அனுமதிக்காமல் முல்லைத்தீவைச் சேராத ஒருவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக அம்மாணவி குறிப்பிட்டுள்ளார்.

## வரலாற்றுச் சான்றுகளை பாதுகாக்கக் கோரிக்கை

(கொழும்பு)

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், குறிப்பாக கிழக்கு மாகாணத்திலுள்ள வரலாற்றுச் சான்றுகள் தொடர்ந்தும் அழிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை எதிர்காலச் சந்ததியினருக்காக பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமையாகும் என ஆளும்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வண.எல்லாவல மேதானந்த தேரர் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தேசிய மரபுரிமைச் சொத்துக்கள் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும் அவர், கிழக்கு மாகாணத்திலுள்ள புராதன குடும்பிமலை விகாரையின் கோபுரம் புதையல் தேடுவோரால் சேதமாக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் புதையல் தோண்டுவோரால் கிண்டப்பட்ட கிடங்கொன்றில் சிறுத்தையொன்று வசித்து வந்ததை நான் கண்டேன். இந்தச் சிறுத்தை இதற்கு முன்னரே குறித்த பகுதிக்கு வந்திருக்குமானால் புதையல் தேடி வந்தோர் பயந்து ஓடியிருப்பர் என்று கிண்டலாகப் பேசிய மேதானந்த தேரர், வில்பத்துச் சரணாலயத்தில் உள்ள வரலாற்றுச் சின்னங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டார்.

## உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் மூன்று வாரங்களுக்குள் வெளியாகும்

(கொழும்பு)

அடுத்த மூன்று வாரங்களுக்குள் கட்டாயமாக உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகும் எனப் பிரதிக் கல்வி அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாவதில் ஏற்பட்டுள்ள தாமதத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளப்போவதாக இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கம் குறிப்பிடுகின்றது.

கல்வி அதிகாரிகளின் இந்த நடவடிக்கையால் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள அநீதிக்கு எதிராக அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்யவுள்ளதாக சங்கத்தின் பிரதம செயலாளர் மகிந்த ஜயசிங்க கூறினார்.

இதேவேளை, பாடசாலைகளில் மூன்றாம் தவணைக்கான விடுமுறை வழங்கப்படுவதற்கு முன்னதாக இந்தப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகும் என பரீட்சைகள் திணைக்களம் ஏற்கனவே அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## வடக்கிலுள்ள தொல்பொருட்கள் தமிழ் பௌத்தர்களுக்கு உரியது

### கூட்டமைப்பு உறுப்பினர் சிறிதரன்

(கொழும்பு)

வடமாகாணத்தில் சில பகுதிகளில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தமைக்கு தொல்பொருளியல் சான்றுகள் உள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைபு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

வடக்கில் தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகளின்போது பௌத்த தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கூறினார். அங்கு சிங்களப் பௌத்தர்கள் இருந்ததாகச் சில சக்திகள் நிரூபிக்க முயற்சிக்கின்றன. உண்மையில் அங்கிருந்தவர்கள் தமிழ் பௌத்தர்களாகும் என அவர் தெரிவித்தார்.

ஒரு சாராரின் கலாசாரத்தை மற்றொரு கலாசாரத்தின் மீது திணிக்காமல், வடக்கிலுள்ள இந்து சமயத்தலங்களைப் பாதுகாப்பது அவசியம் எனவும் அவர் வலியுறுத்தினார். வடக்கிலுள்ள இந்து ஆலயமொன்றிலிருந்து சிவபெருமான் சிலை அகற்றப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பாடசாலைகளில் அரசியல் பேசும் கூட்டமைப்பினர்

### ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலைகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு அதிதிகளாகச் செல்லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல்வாதிகள் சிலர் மாணவர்களின் எதிர்கால கல்வி மேம்பாடுகள் தொடர்பில் கருத்துத் தெரிவிப்பதை விட்டு ஈழச் சிந்தனைகள் தொடர்பிலே உரையாற்றுகின்றனர்.

எனவே நாட்டுக்கோ, அரசுக்கோ, எதிராகச் செயற்படும் விடயத்தை அந்த மாகாணத்தின் ஆளுநர் என்ற வகையில் நான் ஒருபோதும் அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்தார்.

வடக்கில் கல்வி நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குற்றச்சாட்டுகள் முற்றிலும் பொய் என்று வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், தமது அரசியல் இலாபத்திற்காக உண்மைக்குப் புறம்பான தகவல்களைக் கூறி வருவதாகத் தெரிவித்த அவர் இவ்வாறான பொய்யான குற்றச் சாட்டுக்களை தான் முற்றாக மறுப்பதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

## கெப்பிட்டிக்கொலாவ பஸ் விபத்து ஒருவர் பலி; பத்துப் பேர் காயம்

(கொழும்பு)

கெப்பிட்டிக்கொலாவ, அதாகட பகுதியில் நேற்று இடம்பெற்ற பஸ் விபத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் 10 பேர் காயங்களுக்குள்ளான நிலையில் கெப்பிட்டிக்கொலாவ, மதவாச்சி வைத்தியசாலைகளில் அனும்திக்கப்பட்டுள்ளனர்.

புல்மோட்டையிலிருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த தனியார் பஸ் வண்டியொன்றே பாதையைவிட்டு விலகிச் சென்று அருகிலிருந்த வயல் வெளிக்குள் குடைசாய்ந்துள்ளதாக கெப்பிட்டிக்கொலாவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரஞ்ஜித் கும்புரேகம தெரிவித்தார்.

ஏ.அஸங்க என்ற பொலிஸ் கான்ஸ்டபிளே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளார். காயமடைந்த 10 பேரில் இருவர் கெப்பிட்டிக்கொலாவ வைத்தியசாலையிலும் ஏனையோர் மதவாச்சி வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வரகாபொலவில் இருந்து ஹோட்டன் சமவெளியைப் பார்வையிடுவதற்குச் சென்ற குழுவின் பஸ் பள்ளத்தில் வீழ்ந்ததில் 23 பேர் காயமடைந்துள்ளனர். நேற்றுமுன்தினம் மாலை 6.00 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

காயமடைந்த்வர்கள் சிகிச்சைக்காக நுவரேலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## விழிப்புணர்வு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை பிரதேச செய லகத்தினால் சிறுவர் தொடர் பான விழிப்புணர்வு செயலமர்வு ஒன்று நடத்தப்படவுள்ளது.

குறித்த பிரதேச ஆசிரியர் களுக்காக நடத்தப்படும் இச் செயலமர்வில் சிறுவர் துஷ்பிர யோகமும், இளவயது கர்ப்ப மும், சிறுவர் பாதுகாப்பு மற்றும் வீட்டு வன்முறை தொடர்பான சட்டங்கள் தொடர்பில் விழிப் புணர்வூட்டும் வகையில் ஆலோ சனைகளும் கருத்துக்களும் வழங் கப்படவுள்ளது எனத் தெரிவிக் கப்படுகிறது.

## பள்ளி மாணவன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கில் பள்ளி மாணவன் ஒருவனின் சடலம் தூக் கில் தொங்கிய நிலையில் மீட்கப் பட்டிருக்கிறது. நேற்று முன்தினம மாலை இடம்பெற்ற இச்சம்பவத் தின் போது உரும்பிராய் வடக் கைச் சேர்ந்த யோகராசா தர்சன் (வயது - 19) என்ற வசாவிளான் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று வந்த மாணவனே இவ் வாறு சடலமாக மீட்கப்பட்டிருக் கிறார். (135)

# சமுர்த்தி வாழ்வாதார உதவித் திட்டத்தில் வலுவிழந்தோரை முன்னுரிமைப்படுத்துக

### யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின்



(யாழ்ப்பாணம்)

கடந்த கால யுத்தத்தினால் தங கள் அவயவங்களை இழந்த மாற் றுவலுவுள்ளோரது குடும்பங் கள் சமுர்த்தி உதவித் திட்டத்தில் முன்னுரிமைப்படுத்தப்படவேண்டும் என யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித் துள்ளார்.

கடந்த 10ஆம் திகதி நடை பெற்ற சமுர்த்திக் கண்காட்சியும் வாழ்வாதார தொழில் உபகர ணங்கள் வழங்கும் நிகழ்வும் யாழ். புனித பரியோவான் கல் லூரியில் யாழ். மாவட்ட செய லாளரும், அரசாங்க அதிபருமான திருமதி இமெல்டா சுகுமார் தலை மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதி யாகக் கலந்து கொண்டு சிறப்பு ரையாற்றும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில், யுத்தத்தினால் அனைத்தையும் இழந்த மக் களின் வாழ்வாதாரத்தை மேம் படுத்துவதற்காக சமுர்த்தி அபி விருத்திச் சங்கத்தினால் முன் னெடுத்துச் செல்லப்படும் செயற் பாடுகள் பாராட்டிற்குரியது. அவ் வாறே சமுர்த்திக் கண்காட்சியும் வரவேற்கக்கூடியதொன்றே. கடந்த காலங்களில் சமுர்த்திச் செயற் பாடுகளை நடைமுறைப் படுத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகா மையாளர்களை நியமித்து யாழ். மாவட்டத்தில் சமுர்த்தியினை அறிமுகப்படுத்தினோம்.

ஆனால், அன்றைய செயற்பாடு களை விட போர் ஓய்ந்த அமை திச் சூழலில் சமுர்த்திச் செயற் பாடுகள் முன்னேற்றகரமாக உள் ளது. பொருளாதார ரீதியில் பின் தங்கிய யுத்தத்தினால் அனைத் தையும் இழந்த மக்களின் வாழ் வாதாரத்தினை மேம்படுத்தவென வழங்கப்படும் தொழில் முயற்சி உபகரணங்களைக் கொண்டு வாழ்வை மேம்படுத்த முனைய வேண்டும்.

எம் மக்களின் வாழ்வாதா ரத்தை மேம்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் ஊடாக அழிவடைந்த எமது தேச த்தை துரிதமாகக் கட்டியெ ழுப்ப முடியும் என அவர் மேலும் தெரி வித்தார்.

இந்நிகழ்வில் தேசியக் கொடி யினை நிகழ்வில் பிரதம அதிதி யான யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து பிரதான கண் காட்சி மண்டபங்களை நாடாளு மன்ற உறுப்பினர் உதயன், யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். மாந கர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, இலங்கை சமுர்த்தி அதிகார சபைப் பணிப்பாளர் ஆர்.பி.வி. திலகசிறி ஆகியோர் நாடா வெட்டி திறந்து வைத்தனர்.

அடுத்து வாழ்வாதார தொழில உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் தலைமை யுரையை யாழ். மாவட்ட அரச அதிபரும், வரவேற்புரையை யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் சிவசிறி ஆகி யோர் நிகழ்த்தினர். கருத்துரை களை இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் திலகசிறி, சமுர்த்தி அதிகார சபை வாழ்வாதார பிரிவுப் பணிப் பாளர் கணேசராசா ஆகியோர் நிகழ்த்தினர்.

தெரிவு செய்யப்பட்ட பயனாளி களுக்கான தொழில் முயற்சி உபகரணங்களை நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகள் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் பிரதேச செய லாளர்கள், சமுர்த்தி முகாமை யாளர்கள், சமுர்த்தி உத்தி யோகத்தர்கள், பயனாளிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## யாழ். பொதுநூலகத்திற்கு ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். பொது நூலகத்தின் பயன்பாட்டுக்கென அவுஸ்ரேலியா வில் வசித்து வரும் இலங்கைப் பிரதிநிதி ஒருவர் ஒரு தொகுதிப் புத்தகங்களை அன்பளிப்புச் செய்துள்ளார்.

கொழும்பிலுள்ள பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வாசஸ்தலத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ் வொன்றிலேயே அவுஸ்ரேலியாவில் வசித்து வரும் இலங்கைப் பிரஜையான இந்திரா கொன்சால் கோறலெ என்பவர் ஒரு தொகு திப் புத்தகங்களை யாழ். மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவிடம் கையளித்துள்ளார். இத்தொகுதியில் பல்வேறு விடயங்களைக் கொண்ட புத்தகங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## வண்ணை வெங்கடேஸ்வரர் ஆலயத்தில் சனிப்பெயர்ச்சி நவக்கிரக ஹோமம்

(யாழ்ப்பாணம்)

சனிப்பெயர்ச்சியை முன் னிட்டு யாழ்ப்பாணம், வண்ணை வெங்கடேசவரதராஜப் பெரு மாள் ஆலயத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 7 மணிக்கு விசேட நவக்கிரக ஹோமம் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி புதன்கிழமை காலை 7.24 மணிக்கு கன்னி இராசியிலிருந்து துலா இராசிக்கு சனி பகவான் மாற்றமடைவதை அடுத்து 20ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 7 மணி முதல் நவக்கிரக தேவர்களுக்கு விசேட ஹோமம், அபிஷேகம், பூஜை, சனி பகவானுக்கு 1008 சங்காபிஷேகம் என்பன இடம் பெறவுள்ளன.

இவ்விசேட ஹோமத்தில் பங்கு பற்றவரும் அடியார்கள் எதிர் வரும் 19ஆம் திகதிக்கு முன் தமது பெயர்களையும், நட்சத்திரங் களையும் ஆலய அலுவலகத் தில் பதிவு செய்யுமாறு ஆல யத்தினர் கேட்டுக்கொண்டுள்ள னர்.

கடகம், கன்னி, துலாம், விருச சிகம், மீனராசிகளில் பிறந் தோரே இவ்விசேட ஹோமத்தில் பங்குகொள்ளுமாறு கேட்கப்பட் டுள்ளனர்.

## நிலத்தடி நீர்வளத்தைப் பாதுகாக்க வேலணைப் பிரதேச சபை நடவடிக்கை

(மண்டைதீவு)

வேலணைப் பிரதேசத்தின் நிலத்தடி நீர்வளத்தைப் பாது காத்துப் பேணுவதற்கு பிரதேச சபையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்படி நீர்வளப் பற்றாக் குறையான இப்பிரதேசத்தில் நீண்ட காலமாகத் தூர்ந்து போயு ள்ள குளங்களை மறுசீரமைப்புச் செய்வதற்கான திட்டங்களும் முன் னெடுக்கப்பட்டு வருவதாக வேலணைப் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரான கு. சிவ குலசிங்கம் தெரிவித்தார்.

பிரதேச சபையினால் ஏகமன தாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர் மானத்தின் அடிப்படையில் வேல ணைப் பிரதேசத்தில் பாரிய நீர் தேக்கம் ஒன்று ஆதி வைரவர் கோவில் பகுதியில் அமைக்கப் பட்டுள்ளது.

அத்துடன் முத்துமாரியம்மன் கோவிலுக்கு கிழக்காக உள்ள பெரும் குளமும் பருவ கால மழை காலத்திற்கு முன்னர் ஆழமாக் கப்பட்டு தூர் வாரப்பட்டுள்ளது.

மேலும் மண்கும்பான், சாட் டிப் பகுதியை அடுத்துள்ள செட் டிபுலம் குளமும் 30 வருடங் களாக திருத்தப்படாத நிலையில் தற்போது சீர்செய்து தூர் வாரப் பட்டுள்ளது.

இந்த மறுசீரமைப்பு நடவடிக் கைகள் வடமாகாண ஆளுநரின் நிதியில் இருந்தே மேற்கொள் ளப்பட்டுள்ளது. அத்துடன் இச்சீர மைப்புப் பணிகள் முன்னெடுக் கப்பட்டதால் அண்மையில் பெய்த மழையினால் வேலணையில் ஏற் பட்ட வெள்ளப் பெருக்கில் இருந்து குடிமனைகளையும், விவசாய நிலங்களையும் பாதுகாப்பதற் குப் பேருதவியாக அமைந்தது.

இதேவேளை, இக்குளங்களி லிருந்து தூர் வாரப்பட்ட மணல் சின்னமடுக் கிராமத்தில் உள்ள குடியிருப்புக்களில் குறிப்பாக வெள்ளம் தேங்கி நிற்கக்கூடிய பகுதிகளில் கொட்டிப் பரவுவ தற்கு வழங்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (23)

## ஆலய முன்றலில் மாமிச எச்சங்கள் புனிதத்தன்மை பேணப்படுமா?

சிதைவடைந்து கிடக்கும் இந்து ஆலயம் ஒன்றின் முன் மண்ட பத்தில் சில விஷமிகள் மாமிச உணவை உட்கொண்ட பின் அதன கழிவுகளை அந்த இடத்திலேயே வீசிவிட்டுச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் புதுக்குடியிருப்பு 4ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தில் நிகழ்ந்துள்ளது.

ஆலயத்தின் முன் மண்டபத் தில் ஆங்காங்கே மீன் முள்ளு களும், எலும்புத்துண்டுகளும் கிடப் பதைக் கண்டு, கோவிலைத் துப்புரவு செய்ய வந்த பூசகர் அதிர்ச்சியடைந்துள்ளார்.

ஒரு ஆலயத்தின் புனிதத்தன் மையை இவ்வாறு அசிங்கப்படுத் துவது பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களின் மனங்களை மேலும் புண்படுத்தும் செயலென பூசகர் கவலையுடன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆலயத்தின் கரு வறையில் அமைந்துள்ள அம்மன் சிலையின் கையொன்று துண்டிக் கப்பட்டிருப்பதோடு, கோவிலின் உள்ளே இருந்த காத்தவராயன் (சூலம்) மற்றும் காண்டாமணி என பன களவு போயிருப்பதும் குறிப் பிடத்தக்கது. (அ.ப.)





பூநகரி மகாவித்தியாலய பரிசளிப்பு விழா அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், மாணவர்களின் கலை நிகழ்வையும் காணலாம். (112)

# க.பொ.த (சா/த) மாணவர்களின் பிரியாவிடை வைபவம்



(யாழ்ப்பாணம்)

யாழ். ஒஸ்மானியாக்கல்லூரியில் கல்வி கற்ற க.பொ.த.சா/த மாணவர்களினால் கல்லூரி மண்டபத்தில் மாணவத் தலைவர் எம் அப்துல்லா தலைமையில் அண்மையில் பிரியாவிடை வைபவம் நடைபெற்றது.

ஆரம்ப உரையில் அதிபர் கூறுகையில் மாணவர்கள் சா/த. பரீட்சை எழுதியபின்னர் தமது நற்குணத்தையும், பண்பையும், கடமை, கட்டுப்பாட்டையும் கைவிடக்கூடாது தொடர்ந்து வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தி உயர் கல்வியை தொடரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

மாணவ மாணவிகள் ஆசிரியர்களை வாழ்த்திய பாடல்களும் இடம்பெற்றதுடன் ஆசிரியர்களுக்கான நினைவுப் பரிசையும் மாணவர்கள் வழங்கினார்கள்.

அனைத்து ஆசிரியர்களும் தமதுரையில் மாணவர்களின் திறமையையும், பண்பையும், பாராட்டியதுடன் மாணவர்கள் தொடர்ந்து தமது கல்வியை மேம்படுத்தவேண்டும் என வாழ்த்துக்கூறினார்கள்.(105)

# மாணவர்கள் போட்டிகளில் பங்குபற்ற ஆசிரியர்கள் ஊக்கப்படுத்த வேண்டும்

**பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஏ.எஸ். சற்குணராசா**

(யாழ். நிருபர்)

நகர்ப்புற ஆரம்பப்பாடசாலை மாணவர்களிடையே காணப்படும் திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கு ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். மாகாண, தேசிய மட்டப் போட்டிகளில் நகர்ப்புற ஆரம்பப்பிரிவு மாணவர்களின் சாதனைகள் எதிர்காலத்தில் அதிகரிக்க அதிபர், ஆசிரியர்கள் முன்னின்று உழைக்க வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் இந்துமகளிர் ஆரம்ப பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா கடந்த சனிக்கிழமை காலையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய யாழ். கல்வி வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஏ.எஸ். சற்குணராசா குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் செல்வி சூரியவதனி அரசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பிரதமவிருந்தினர் தொடர்ந்து பேசுகையில்,

மலையகப்பகுதிகளிலும், கிராமப்புறங்களிலும் வளங்கள் குறைந்த பாடசாலை மாணவர்கள் ரியூசன் வசதிகள் இல்லாத சுழலில் மாகாண, தேசிய மட்டத்தில் சாதனை படைக்கிறார்கள் பல்வேறு வளங்களும், ரியூசன் வசதிகளும் கொண்ட நகர்ப்புறப்பாடசாலை மாணவர்கள் ஏன் சாதனை படைக்க முடியாது.

ஆசிரியர்கள் வந்தோம் , கடமைக்காக கற்பித்தோம் போனோம் என்ற நிலையில் இல்லாது மாணவரிடையே மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொண்டு வந்து தேசிய மட்டத்தில் சாதனை படைக்க வழிகாட்ட வேண்டும். எனக் கேட்டுக்கொண்டார்.(10)

# புதுக்குடியிருப்புப் பகுதிகளில் இந்து ஆலயங்கள் சேதம்

(புதுக்குடியிருப்பு)

போர் அனர்த்தத்தின் விளைவாக புதுக்குடியிருப்பில் இந்து ஆலயங்கள் பல மிகவும் சேதாரமான முறையில் காட்சியளிக்கின்றன. இவற்றில் முதலாம் வட்டாரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம் மற்றும் 4ஆம் வட்டாரத்திலுள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் ஆகியன மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளன.

மக்களின் வேண்டுகோளுக்கிணக்க ஸ்ரீகந்தசுவாமி ஆலயத்திலும்,2ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்திலுமுள்ள விக்கிரகங்கள் பாலஸ்தானம் செய்யப்பட்டு பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. கடந்த கந்தசஷ்டி தினத்தை முன்னிட்டு ஸ்ரீ கந்த சுவாமி ஆலயஅறங்காவல் சபையினர் இராணுவ உயரதிகாரியுடன் தொடர்பு கொண்டதையடுத்து ஆலயத்தில் பூசை வழிபாடுகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

# கொக்கிளாய் மருத்துவ நிலையத்திற்கு வைத்தியரை நியமிக்குமாறு கோரிக்கை

(கொக்கிளாய்)

மீளக்குடியமர்த்தப்பட்ட கொக்கிளாய்ப் பகுதி மக்கள் மருத்துவ வசதிகளை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கொக்கிளாய் பகுதியில் ஒரேஒரு ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையம் காணப்படுகின்றது. இந்த மருத்துவ நிலையத்திலே மக்கள் தமக்கான மருத்துவ சேவைகளை பெற்று வருகின்றனர்.

மேற்படி மருத்துவ நிலையத்துக்கான வைத்தியர் கொக்கிளாயில் இருந்து ஏறத்தாள 40 சதுர தூரத்தில் உள்ள முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்திய சாலையில் இருந்தே வந்து சென்றார்.

அவ்வாறு கொக்கிளாய் பகுதிக்கு வருகின்ற வைத்தியர் வாரத்தில் இரண்டு நாட்கள் (புதன்,வெள்ளி) ஆகிய தினங்களிலேயே கொக்கிளாய் வைத்தியசாலைக்கு வருகை தருவது வழக்கமாகும்.

தற்போது இவ்வாறு மாஞ்சோலையில் இருந்து வைத்தியர் வருகைதருவதும் நிறுத்தப் பட்டுள்ளது.

ஆகையினால் கொக்கிளாய் பகுதிக்கு என அவ் வைத்தியசாலைக்கு நிரந்தரமாக வைத்தியரை நியமனம் செய்யவேண்டும் என மக்கள் ஆதங்கத்துடன் தெரிவிக் கின்றனர்.

இவ்வாறு மக்களின் ஆதங்கம் நிறைவேறும் வரை கொக்கிளாய் பகுதிக்கான மருத்துவ வசதிகளை அம்மக்கள் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமம் ஏற்படும் என தெரியவருகின்றது. (17)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(13.12.2011–செவ்வாய்க்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
கார்த்திகை 27 ஆம் நாள்.
இராகுகாலம் 3.20-4.50, சுபநேரம் 10.50 -12.20 வரை
நட்சத்திரம்: புனர்பூசம் மு.இ . 10.22 வரை
திதி: திருதியை மு.இ. 9.57 வரை

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:– பணம்வரும், குடும்பத்தில் குதூகலம், பஸ்பயணம், விபத்து வரக் கூடும்.

ரிஷபம:–நினைத்ததைச்சாதித்தல், பணக்கஷ்டம், சுபகாரியச்செலவு, தேகம் சுகம், திடீர்ப்பயணம்.

மிதுனம் :–பணம் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சி, எதிர்பாராத திடீர்ப்பணம், சகோர நன்மை.

கடகம்:– குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம் சங்கடமான நிலை, தேகம் சுகம், திடீர் விபத்து

சிம்மம்:– பணம்வரும், தவறான முடிவு, தெருவிபத்து வரக்கூடும், வீண் அலைச் சல், தேகம் சுகம்.

கன்னி :– குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், முகங்கோணுதல், சகோதர நன்மை, தேகம் சுகவீனம்.

துலாம் :–பணக்கஷ்டம், குடும்பத்தில் கவலை, வீண் சண்டை, வாக்குவாதம், தேகம் சுகம்.

விருச்சிகம்:–தேகம் சுகம், பணம்,வரும், முயற்சி வீணாதல், மன நிறைவு, குருபக்தி

தனுசு:– பணக்கஷ்டம், எதிர்பாராத பணயம், ஒரு விபத்து வரலாம், பணி நிலைக்கஷ்டம், தேகம் சுகம்.

மகரம:– அதிகாரப்போட்டி, பணம் வரும் மன நிறைவு, குருபக்தி, தேகம் சுகம்.

கும்பம் :– பணக்கஷ்டம், குடும்பத்தில் பொறுப்பு, முயற்சி வீணாதல், வாக்குவாதம் தேகம் சுகம்.

மீனம் :– குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும் பணிநிலைக்கஷ்டம், உடம்பு பலவீனம்.

# வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதான வீதியிலுள்ள சிறைச்சாலைக்கு முன்பாகவுள்ள வீதியும், சின்னக் கடைச்சந்திப் பகுதியும் பலத்த சேதமடைந்துள்ளதால் அவ் வீதியால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே பயணம் செய்கின்றனர்.

இவ் வீதி முன்னர் சேதமடைந்திருந்த நிலையில் தற்போது பெய்து வரும் மழையினால் மேலும் சேதமடைந்து போக்குவரத்துக்கு பெரும் இடையூறாகக் காணப்படுகிறது.

இவ்வீதிப்பகுதியில் உணவகங்கள் மற்றும் கடைகள் அமைந்துள்ளதுடன் நாளாந்தம் பலர் பயணம் செய்துவருகின்றனர்.

இதேவேளை இவ்வீதிச் சேதம் குறித்து பல முறை சுட்டிக்காட்டியும் இதுவரை அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் பொதுமக்களின் போக்குவரத்தைக் கருத்திற்கொண்டு இவ்வீதியைப் புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்டவர்களை இப்பகுதி மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

(பா)

# பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகள் அன்பளிப்பு

(கொக்கிளாய்)

கொக்கிளாயில் இயங்கும் கொக்கிளாய் அ.த.க. பாடசாலைக்கு என கம்பஹா மாவட்டத்தின் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கல்வியாளர்கள் மாணவர்களுக்கான சீருடைகளை வழங்கியுள்ளனர்.

கடந்த ஏழாம் திகதி புதன்கிழமை கொக்கிளாய் அ.த.க.பாடசாலைக்கு விஜயம் செய்த கம்பஹா மாவட்டத்தைச்சேர்ந்த மக்கள் மாணவர்களுக்கான சீருடை விநியோகத்தை மேற்கொண்டனர்.

கடந்த முப்பது வருடமாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக இனங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு ஐக்கியம் என்பன சீர்குலைந்து போயுள்ள நிலையில் மீண்டும் இன ஐக்கியத்தை மேம்படுத்தும் நோக்குடன் இவ்வாறான விஜயத்தை மேற்கொண்டிருப்பதாக கம்பஹ மாவட்ட மக்கள் தெரிவித்தனர்.

இறுதியாக இவர்களுக்கு பாடசாலை அதிபர் விக்னேஸ்வரன் நன்றிகளை தெரிவித்தார். (17)

# மணியந்தோட்டப் பகுதி வீதிகளை உலகவங்கிக் குழுவினர் பார்வையிட்டனர்

(யாழ்ப்பாணம்)

மணியந்தோட்டப்பகுதியில் உள்ள வீதிகளைத்திருத்துவதற்கு உலக வங்கிக்குழுவினர் முன்வந்திருப்பதாக நல்லூர்ப் பிரதேச சபையின் எதிர்க்கட்சித்தலைவரும் ஈ.பி.டி.பியின் பிரதேச அமைப்பாளருமான அ.இரவீந்திரதாஸன் தெரிவித்தார்.

இப் பகுதிகளில் உள்ள கர்த்தர் கோவில் வீதி, 2ஆம் குறுக்குத் தெரு ஆகிய வீதிகளையும், உதயபுரம் கடற்கரைவீதி, 12ஆம் வட்டார உள்ளக வீதி ஆகிய வீதிகளின் நிலை தொடர்பாக அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டு வந்ததை அடுத்து உலக வங்கிக்குழுவினர் மேற்படி வீதிகளைப் பார்வையிட்டுச்சென்றதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



கரைநகர்ப் பிரதேச பாலர் பாடசாலைகள் இணைந்து அண்மையில் கரைநகர் சைவ மகாசபை மண்டபத்தில் கைவினைப் பொருட்காட்சி ஒன்றினை நடத்தினர். அக்காட்சியில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த பொருட்கள் யாழ்ப்பாண வலய மட்ட பாலர் பாடசாலைப் பொருட்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டது.

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

**21.12.2011 - 16.12.2014** ஜோதிடமாமணி முருகு பாலமுருகன்



## ரிஷபம்

ரோகிணி, கார்த்திகை 2,3,4ஆம் பாதங்கள்: மிருக சீரிஷம் 1,2ஆம் பாதங்கள்

சாதுர்யம், சாமர்த்தியம், கவர்ச்சி நயம், பிறரை தன் வசமாக்கக்கூடிய பேச்சாற்றல் கொண்ட ரிஷப ராசி நேயர்களே! உங்கள் ஜென்ம ராசிக்கு தர்மகர் மாதிபதியான சனி பகவான் குண ரோக ஸ்தானமான 6ஆம் வீட்டில் உச்சம் பெற்று சஞ்சரிக்க உள்ளார். இது வெற்றி மேல் வெற்றியினை ஏற்படுத்தும் அமைப்பாகும். இதனால் உங்களுக்கு இருந்து வந்த பிரச்சினைகள் அனைத்தும் பகலவனைக் கண்ட பனிபோல மறையும். குடும்பத்தில் சுபீட்சம், மகிழ்ச்சி, எடுக்கும் காரியங்களில் வெற்றி, தொழில், வியாபாரத்தில் சிறப்பான வாய்ப்புகள் தேடி வரக் கூடிய அமைப்பு, திருமண சுபகாரியங்கள் நடைபெறும் அமைப்பு, உத்தியோகஸ்தர்களுக்கு உயர்வுகள் போன்ற சாதகமான நற்பலன்களை பெறுவீர்கள்

உங்களுக்கு இருந்து வந்த வம்பு வழக்குகள் யாவும் மறைந்து உங்கள் பலமும் வளமும் கூடும். நீண்ட நாட்களாக நீங்கள் கண்ட கனவுகள் கூட அனைத்தும் நினைவாகும். வரும் காலம் ஒரு பொற்காலமாக இருக்கும். தாராள தனவரவுகளும், ஷேர் ஸ்பெகுலேஷன் போன்றவற்றால் எதிர்பாராத பணவரவுகளும் உண்டாகும்.

சனி 6இல் பலமாக சஞ்சரிக்கும் இக்காலங்களில் 17-05-2012 வரை ஆண்டு கோளான குருபகவான் ஜென்ம ராசிக்கு விரயஸ்தானமான 12 இலும் 17-05-2012 முதல் 28-05-2013 வரை ஜென்ம ராசியிலேயே சஞ்சாரம் செய்யவிருப்பதால் கொடுக்கல் வாங்கல் போன்ற விஷயங்களில் கவனமுடன் செயற்படுவது நல்லது. குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் அவை சுப செலவுகளாகவே இருக்கும். 28-05-2013 முதல் 13-06-2014 வரை குரு பகவான் தனஸ்தானமான 2ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருக்கும் காலங்களில் சனியும் சாதகமாக சஞ்சரிப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சி தரக்கூடிய சம்பவங்கள் நடைபெறும். கணவன் மனைவியிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பொன், பொருள் சேர்க்கை, வீடுமனை, வண்டி, வாகனங்கள் வாங்கும் யோகம் போன்ற யாவும் உண்டாகும். பணம் கொடுக்கல் வாங்கல் போன்றவற்றிலும் சரளமான நிலை இருக்கும். பெரிய மனிதர்களின் நட்பு கிட்டும். 02-12-2012 வரை சர்ப கிரகங்களான கேது ஜென்ம ராசியிலும் ராகு 7இலும் சஞ்சரிப்பதால் நெருங்கியவர்களை சற்று அனுசரித்துச் செல்வது நல்லது. கடன்களும் நிவர்த்தியாகி வங்கி சேமிப்பு பெருகும்.

### தேக ஆரோக்கியம்

உடல் ஆரோக்கியமானது மிக அற்புதமாக அமையும். அவ்வப்போது சோர்வு மந்த நிலை ஏற்பட்டாலும் அதிக அளவில் மருத்துவ செலவுகள் உண்டாகாது. நீண்ட நாட்களாக சிகிச்சை எடுத்து வருபவர்கள் கூட படிப்படியாகக் குணமடைவார்கள். குடும்பத்திலுள்ளவர்களும் எந்தப் பாதிப்புகளுமின்றி நலமாக இருப்பதால் மனதில் நிம்மதியும் மகிழ்ச்சியும் உண்டாகும்.

### குடும்பம் பொருளாதார நிலை

குடும்ப ஒற்றுமையானது சிறப்பாக இருக்கும். சில நேரங்களில் சிறுசிறு வாக்கு வாதங்கள் தோன்றினாலும் அது அப்போதே மறந்துபோகும். உங்களைப் புரிந்து கொள்ளாமல் பகைமை பாராட்டிய உற்றார், உறவினர்களும் இல்லம் தேடி வந்து நட்பு கரம் நீட்டுவார்கள். வீடு, மனை, பூமி, நிலம், வண்டி, வாகனம் வாங்கும் கனவுகள் அனைத்தும் நனவாகும். சிலர் பழைய வீட்டைப் புதுப்பித்து கட்டுவார்கள். திருமண வயதை அடைந்தவர்களுக்கு சுபகாரியங்கள் தடபுடலாக நிறைவேறும். பொருளாதார நிலையும் சிறப்பாக இருப்பதால் பொன், பொருள், ஆடை, ஆபரணம் யாவும் சேரும். கடன்கள் யாவும் நிவர்த்தியாகும். பூர்வீக சொத்துக்களாலும் இலாபங்கள் கிட்டும்.

### உத்தியோகஸ்தர்களுக்கு

உத்தியோகஸ்தர்கள் இதுவரை பட்ட கஷ்ட நஷ்டத்திற்கெல்லாம் ஓர் தீர்வு உண்டாகும். எதிர்பாக்கும் பதவி உயர்வு, ஊதிய உயர்வு யாவும் கிடைக்கப்பெறும். பொருளாதார நிலை உயர்வடையும். கௌரவமான பதவிகள் கிடைப்பதால் சமுதாயத்திலும் ஓர் நிலையான அந்தஸ்தினை அடைய முடியும். உடன் பணி புரிபவர்களின் அன்பான ஆதரவுகளால் வேலைப் பளுவை குறைத்துக்கொள்ள முடியும். வெளியூர் வெளிநாடுகளுக்குச் சென்று பணி புரிய விரும்புபவர்களின் விருப்பமும் நிறைவேறும்.

### வியாபாரிகளுக்கு

தொழில் வியாபாரம் செய்பவர்கள் எதிர்பார்க்கும் இலாபத்தினை அடைய முடியும். இதுவரை இருந்து வந்த மறைமுக எதிர்ப்புகள் பிரச்சினைகள் யாவும் குறைந்து வர வேண்டிய வாய்ப்புகள் வந்து சேரும், கூட்டாளிகளிடையே இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். தொழிலாளர்களும் ஒற்றுமையுடன் செயற்படுவார்கள். வெளியூர் வெளிநாட்டு தொடர்புடையவைகளால் அனுகூலமான பயணங்கள் அமையும். சில நேரங்களில் எடுக்கும் முயற்சிகளில் தடை தாமதங்கள் நிலவினாலும் எதையும் எளிதில் சமாளித்துவிடக்கூடிய ஆற்றலும் கொடுக்கும்.

### அரசியல் வாதிகளுக்கு

இது அற்புதமான பொற்காலமாகவே இருக்கும். எடுக்கும் காரியங்களில் வெற்றி மேல் வெற்றி கிட்டும். எதிர்பாராத வகையில் கௌரவமான பதவிகளும் கிடைக்கும். சமுதாயத்தில் பெயர் புகழ் உயர்வடையும். மக்களின் ஆதரவுகள் மகிழ்ச்சியளிக்கும். மறைமுக வருவாய்களால் பொருளாதாரம் உயர்வடையும்.

### விவசாயிகளுக்கு

விவசாயிகள் உழைப்பிற்கேற்ற ஊதியங்களைப் பெறுவார்கள். விளைச்சல் சிறப்பாக இருப்பதால் பட்டபாட்டிற்கான முழு பலன்களும் கிடைக்கும். பொருளாதார நிலையும் உயர்வடையும். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். பூமி மனை வாங்கும் யோகம், பம்பு செட்போடும் அமைப்பு உண்டாகும். நெருங்கியவர்களை அனுசரித்து செல்வது நல்லது.

### பெண்களுக்கு

உடல் ஆரோக்கியம் அற்புதமாக அமையும். குடும்பத்தில் கணவன், மனைவியிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். சிலருக்கு நினைத்தவரையே கைப்பிடிக்கும் யோகமும் உண்டாகும். சிறப்பான புத்திர பாக்கியம் அமைந்து மகிழ்ச்சியளிக்கும். பொன், பொருள் சேரும். வீடுமனை, வண்டி, வாகனங்கள் வாங்கும் யோகமும் உண்டாகும். உற்றார், உறவினர்களும் ஒற்றுமையுடன் செயற்படுவார்கள். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்க்கும் பதவி உயர்வு, ஊதியம் கிடைக்கப்பெறும்.

### மாணவர்களுக்கு

கல்வியில் பல சாதனைகள் செய்து அனைவரின் பாராட்டுக்களையும் பெறுவீர்கள். எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிட்டும். கல்விக்காக வெளியூர் வெளிநாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பும் அமையும். நல்ல நட்புக்களால் மிகப்பெரிய அனுகூலங்களைப் பெறுவீர்கள். அரசு வழியிலும் எதிர்பார்க்கும் உதவிகள் கிடைக்கப்பெறும்.

# பாரம்பரிய விழுமியங்கள் கீழ்நோக்கியே செல்கின்றன

## யாழ். அரச அதிபர் ஆதங்கம்



(குருநகர்)

யாழ். அரச அதிபர் பதவி கிடைத்து வந்த பின்னால் மிகவும் நிதானமாகக் கஷ்டப்பட்டு ஊசிமேல் நடப்பதுபோல் நிலை எடுத்துக் கொண்டே எனது கருத்துக்களை வெளியிட்டு வருகிறேன். இங்கே ஏறத்தாள ஐந்து பத்திரிகைகள் வெளிவருகின்றன. அவற்றினூடாக வெளிப்படுத்தப்படுகின்ற கருத்துக்கள் மிகவும் சிந்திக்கப்பட்ட பின்பாக எடுக்கப்பட்டவையாகவே இருக்கும் என யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் முற்பகல் யாழ். செயலகக் கேட்போர் கூடத தில் நடைபெற்ற தினகரன் வாரமஞ்சரி வாசகர் வட்ட அங்குரார்ப்பணமும் மூத்த பத்திரிகையாளர் கௌரவிப்பும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

நிகழ்வில் வாரமஞ்சரி ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமை யில் நடைபெற்றது. அரச அதிபர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

அரசு பெருந்தொகையான பணத்தைச் செலவு செய்து அரச அதிகாரிகளை நியமித்துள்ளது. அதற்கு விசுவாசமாக நாங்கள் நடக்க வேண்டும். உலகளாவிய மட்டத்தில் மேன்மையாகத் திகழ்ந்த யாழ். மாவட்டம் இப்பொழுது மிகவும் கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களில் சீரழிந்து கீழ் நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது.

அரச அதிகாரி என்ற பொறுப்புடன் நோக்குகையில் அதனைச் சீர்தூக்க வேண்டிய மேலான கடமை எனக்கிருப்பதாக கருதுகிறேன். என்னுடைய பதவிக் காலத்தில் அதனைச் செய்வதற்கும் திடசங்கற்பம் கொண்டுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கவிஞர் சோ. பத்மநாதன் தலைமையில் பண்பாடு படும்பாடு கவியரங்கமும் வண்டியும் தொந்தியும் நகைச் சுவை நாடகம் என்பனவும் கலை நிகழ்வில் இடம்பெற்றன. (68)

# கலைப்படைப்புக்களை அழியவிடாது பாதுகாப்பது சிறந்த விடயமாகும்


## யாழ். ஆயர் சௌந்தரநாயகம் ஆண்டகை

(குருநகர்)

நாட்டுக் கூத்து வடிவத்தை படமாக்கியதன் மூலம் அந்தக் கலையை எதிர்காலத்தில் காணாமற்போய்விடாமல் ஆவணப்படுத்தப்பட்டுள்ள செயலை மனதாரப் பாராட்டுகிறேன் என யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்தார்.

ஆளுமை வீடியோ திரைப்பட வெளியீடு கடந்த சனிக்கிழமை பிற்பகல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

சென் ஜோன்ஸ் கல்லூரி முன்னாள் உப அதிபர் யே. ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற விழாவில் தொடர்ந்து அவர் பேசுகையில்,



கலைமாமணி கிறிஸ் தோப்பர் ஒரு கிறிஸ்தவக் கலைஞர். அவர் நீண்ட காலமாக இத்தகைய பணியில் ஈடுபட்டு வருவதையும் அறிகிறேன். வீடுகளில் அமைதியாக இருந்து நாட்டுக் கூத்தை தொலைக்காட்சிப் பெட்டிகளில் போட்டுப் பார்க்கும் வகையில் இறுவட்டு வடிவில் ஆளுமை என்னும் இக்கூத்துப் பட உருவாக்கம் வெளியிடப்பட்டுள்ளதை வரவேற்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

வெளியீட்டுரை நிகழ்த்திய பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா "நாடகத்தில் இருந்துதான் சினிமா பிறந்தது. நாட்டுக்கூத்தொன்று சினிமாவாவது காலப் பரிணாம வளர்ச்சியை படம் பிடித்துக் காட்டுகிறது என்றார் படத்தில் நடித்த கலைஞர்கள் மற்றும் பங்களிப்புச் செய்த தொழில் நுட்பவியலாளர்கள் பொன் னாடை போர்த்திக் கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (68)

# கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நடுகை



(காரைநகர்)

கலாசாரத் திணைக்களத்தினால் 8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் காரைநகர் பிரதேச கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா கடந்த வெள்ளிக் கிழமை காலை 9 மணியளவில் காரைநகர் கலாசார உத்தியோகஸ்தர் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம அதிதியாக் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி. ஜெயசீலன், சிறப்பு விருந்தினராக ஈ.பி.டி.பி. கட்சியின் அமைப்பாளரும், காரைநகர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான வி. கண்ணன், காரைநகர் அபிவிருத்தி சபை செயலாளர் சற்குணராசா மற்றும் காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் வே. ஆனைமுகன், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனை உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காரைநகர் பிரதேச அமைப்பாளர் வி. கண்ணன் உரையாற்றுகையில், எமது பிரதேசத்தின் கலாசாரத்தைப் பேணுவதற்கும், பாதுகாப்பதற்கும் ஓர் அங்கீகாரமாக இம்மண்டபம் விளங்கும். அத்தோடு இந்த மண்டபம் அமைவதற்கு அடித்தளமாக உதவிய லண்டன் காரை அபிவிருத்தி சபையினால் ரூபா 4 இலட்சம் நிதியிலே நிலத்தை கொள்வனவு செய்து கொடுத்ததற்கும் இச்சந்தர்ப்பத்திலே எமது மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவிப்பதோடு, மேலும் அனைவரும் இக்கலாசார மண்டபமானது இவ்விடத்திலே சிறப்புடன் விளங்க அனைவரது ஒத்துழைப்பை வேண்டுகின்றேன்.

எத்தனையோ இடர்பாட்டின் மத்தியில் எமக்கு குறுகிய காலத்தினுள் இந்நிதி எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது.

அந்நிதி திரும்பி செல்லாது உடனடியாகத் தீர்வினை எடுத்து அதனை செயற்படுத்திய உதவி அரசாங்க அதிபருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என அவர் தெரிவித்தார்.

# சிட்டாகொங் டெஸ்ட் பாக். இனிங்ஸ் வெற்றி



(சிட்டாகொங்)

பங்களாதேஷ் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி இனிங்ஸ் மற்றும் 184 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.


பங்களாதேஷ், பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி நேற்று சிட்டாகொங்கில் நிறைவடைந்தது.

முதல் இனிங்ஸிற்காக ஆடிய பங்களாதேஷ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நசீர் உசைன் 41 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அஜ்மல், அப்துர் ரஹ்மான் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய பாகிஸ்தான் அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 594 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. இதில் யுனிஸ்கான் ஆட்டமிழக்காது 200 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் மொகமட் ஹபீஸ் 143, அசட் ஷபீக் 104 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சன்னி மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

459 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய பங்களாதேஷ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 275 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நஸிமுற்டின் 78, ஷகிப் அல் ஹசன் 51 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அப்துர் ரஹ்மான் நான்கு, சயிட் அஜ்மல், சீமா தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இதன் மூலம் ஒரு இனிங்ஸ், 184 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக யுனிஸ்கான் தெரிவானார்.

# இரண்டாவது டெஸ்டில் வெற்றியீட்டி தொடரை சமன் செய்தது நியூசிலாந்து



(ஹொபார்ட்)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி ஏழு ஓட்டங்களினால் வெற்றிபெற்றது. இதன் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் 1-1 என்ற நிலையில் சமனிலையில் நிறைவடைந்துள்ளது.

அவுஸ்ரேலிய, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி ஹொபார்ட்டில் நேற்று நிறைவடைந்தது.

முதல் இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வில்லியம்ஸன் 56 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பட்டின்சன் ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய அவுஸ்ரேலிய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 136 ஓட்டங்களைப் பெறறது. இதில் பீற்றர் சிடில் 36 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மாட்ரின் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

14 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரைடர் 56 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பட்டின்சன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

241 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிற்ஸிற்காக ஆடிய அவுஸ்ரேலிய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 233 ஓட்டங்களைப் பெற்று ஏழு ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் வோர்ணார் ஆட்டமிழக்காது 123 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பரக்வெல் ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இவ்வெற்றியின் மூலம் டெஸ்ட் தொடர் சமநிலையில் நிறைவடைந்தது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக வோர்ணரும், தொடரின் நாயகனாக பட்டின்சனும் தெரிவானார்கள்.

# ஹோலி முதலிடம்



(புதுடில்லி)

இந்த ஆண்டில் ஒரு நாள் போட்டிகளில் அதிக ஓட்டங்களைக் குவித்தவர் பட்டியலில் இந்திய அணியின் ஹோலி முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

இந்திய அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராகத் திகழும் ஹோலி, மேற்கிந்தியத்தீவு அணிக்கு எதிராக சென்னையில் நேற்று முன்தினம் நடந்த 5ஆவது ஒருநாள் போட்டியில் சிறப்பாக ஆடி 85 பந்தில் 80 ஓட்டங்களை எடுத்தார்.

இதன்மூலம் இந்த ஆண்டில் ஒருநாள் போட்டியில் அதிக ஓட்டங்களை குவித்தவர் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தார். ஹோலி 34 போட்டிகளில் 1381 ஓட்டங்களை எடுத்துள்ளார். அதிகபட்சம் 117 ஓட்டங்களாகும். 4 சதமும், 8 அரை சதமும் அடித்துள்ளார். சாராசரி 85.56 ஆகும்.

ட்ரொட் 29 ஆட்டத்தில் 1315 ஓட்டங்களை எடுத்துள்ளார். அவர் 2 சதமும், 10 அரை சதமும் அடித்துள்ளார். வட்சன் 23 போட்டியில் 1139 ஓட்டங்கள் எடுத்து 3ஆவது இடத்தில் உள்ளார்.

# தெற்காசிய கால்பந்து இந்திய அணி சம்பியன்



(புதுடில்லி)

தெற்காசிய கால்பந்துத் தொடரில், மீண்டும் இந்திய அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

புதுடில்லியில், 9ஆவது தெற்காசிய கால்பந்து சம்பியன்ஷிப் தொடர் நடந்தது. இதில் இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட எட்டு அணிகள் விளையாடின. நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் இந்தியா, ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின. இதில் 4-0 என்ற கோல் கணக்கில் வென்ற இந்திய அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இத்தொடரில் இதுவரை எட்டு முறை இறுதிப் போட்டிக்கு முன்னேறிய இந்திய அணி, ஆறாவது முறையாக (1993, 97, 99, 2005, 09, 11) சம்பியன் பட்டம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதல்முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறிய ஆப்கானிஸ்தான் அணி, இரண்டாவது இடம் பிடித்து ஆறுதல் பெற்றது. இத்தொடரில் அதிக கோல் (7 கோல்) அடித்த வீரர் மற்றும் சிறந்த வீரருக்கான விருதை இந்தியாவின் சுனில் செத்ரி தட்டிச் சென்றார்.

# முதலாவது டெஸ்ட் நாளை

(டர்பன்)

தென்னாபிரிக்க, இலங்கை அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி நாளை தென்னாபிரிக்காவில் ஆரம்பமாகவுள்ளது.

தொடரை வெல்லவோ அல்லது சமப்படுத்தவோ கடுமையாக முயற்சிப்பேன் என இலங்கை அணியின் கப்டன் டில்சான் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நான்காவது முறையாக அவுஸ்ரேலியா சம்பியன்



(ஒக்லாந்து)

நியூசிலாந்தின் ஒக்லாந்து நகரில் நடந்த சம்பியன்ஸ் கிண்ண ஆண்கள் ஹொக்கி போட்டித் தொடரில், அவுஸ்ரேலிய அணி தொடர்ந்து 4ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தது.

இறுதிப் போட்டியில் ஸ்பெயின் அணியுடன் நேற்று முன்தினம் மோதிய அவுஸ்ரேலியா 1-0 என்ற கோல் கணக்கில் வென்றது. அந்த அணி இதுவரை 12 முறை சம்பியன் கிண்ணத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



முல்லைத்தீவு மாவட்ட அரச திணைக்களங்களுக்கிடையில் நடத்தப்பட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ணக் கரப்பந்தாட்டப் போட்டித் தொடரில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் அலுவலக அணியைக் காணலாம். (93)

# நிர்வாக மட்டத்திலான மாற்றம் தேசிய அணியில் தாக்கம் ஏற்படும்

(டர்பன்)

இலங்கை கிரிக்கெட்டின் நிர்வாக மட்டத்தில் ஏற்பட்ட மாற்றம் தேசிய கிரிக்கெட் அணியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் நிச்சயம் சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்துவோம்.

இளம் வீரர்கள் தங்கள் இடத்தை நிரந்தரமாக்குவதற்கு தகுந்தபடி தங்களைத் தயார்ப்படுத்தவேண்டும். இதற்கு போட்டிகளில் திறமைகளை வெளிப்படுத்துவதன் மூலமே சாத்தியமாகும்.

இலங்கை கிரிக்கெட் நிர்வாக மட்டத்தில் ஏற்பட்ட மாற்றம் தேசிய கிரிக்கெட் அணியில்



தமாக்கத்தை ஏற்படுத்தும் என்று நம்புகின்றேன். அது வளர்ச்சி நிலையை நோக்கி நகர்ந்தால் அது அனைவருக்கும் நல்லதாகவே அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


# செயலக மட்ட விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் நட்புறவை வளர்க்கும் முகமாக வலிகாமம் பிரதேச செயலகங்களுக்கு இடையே கிரிக்கெட், கரம் மற்றும் சதுரங்கப் போட்டிகளை நடத்த முன்வந்துள்ளது.

அலுவலகங்களில் கடமையாற்றும் அனைத்து வயதினரும் கலந்துகொள்ளக்கூடிய வகையில் இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன. 40 வயதிற்கு மேற்பட்ட மூவரும் 30க்கும் 40க்கும் இடைப்பட்ட வயதுடையவர்கள் ஐவரும் 30 வயதிற்கு குறைந்தவர்கள் மூவரும் என்ற அடிப்படையில் அணித் தெரிவு மேற்கொள்ளப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையின் ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு



(கொழும்பு)

இலங்கையின் ஏற்றுமதி இவ்வருடம் அதிகரித்திருப்பதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. இவ்வருடத்தில் இரண்டாவது தடவையாக கடந்த செப்டெம்பர் மாதம் ஏற்றுமதி வருமானம் அதிகரித்துக் காணப்பட்டதாக மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தைக்கப்பட்ட ஆடைகள், இறப்பர் போன்றவற்றின் கேள்வி அதிகரித்தமையால் செப்டெம்பர் மாதம் இலங்கையின ஏற்றுமதி வருவாய் அதிகரித்த நிலையில் காணப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டுக்கான விற்பனைகள் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் 19.1 வீதமாகக் காணப்பட்ட நிலையில் செப்டெம்பர் மாதத்தில் அது 20.4 வீதமாக அதாவது 854 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதென மத்திய வங்கி சுட்டிக்காட்டுகிறது. செப்டெம்பர் மாதத்தில் ஆடை உற்பத்தித்துறையின் ஏற்றுமதி 13.7 வீதமாக அதிகரித்துள்ளது. வெளிநாடுகளுக்கான இறப்பர் விற்பனை 37.3 வீதமாக அதிகரித்துள்ளது. 2011 ஆம் ஆண்டு முதல் 9 மாதத்தில் ஏற்றுமதி 27.2 வீதத்தால் அதிகரித்துள்ள அதேநேரம் இறக்குமதி மீதான செலவீனமும் 51.8 வீதமாக அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி வெளியிட்டிருக்கும் ஆய்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. உணவு, குடிவகை மற்றும் புகையிலை ஆகியவற்றின் ஏற்றுமதி 48 வீதமாக அதிகரித்துள்ளது.

உலக சந்தையில் எரிபொருள்களின் விலை அதிகரித்திருந்த நிலையில் எரிபொருள்களின் இறக்குமதியில் கூடுதலான செலவனம் ஏற்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேநேரம் 2011ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களில் உல்லாசப் பயணத்துறை 48 வீதத்தால் அதிகரித்திருப்பதுடன் இதன் ஊடாக 580 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் இலங்கைக்குக் கிடைத்திருப்பதாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டின் நீதி நிலை பற்றி ஹிருனிகா கவலை



(கொழும்பு)

நாட்டில் நீதி நிலை நாட்டப்படுகின்றதா என்பது சந்தேகமே என அண்மையில் படுகொலை செய்யப்பட்ட பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் புதல்வி ஹிருனிகா பிரேமசந்திர, ஜனநாயக இடதுசாரி முன்னணியின் 12ஆம் ஆண்டு நிறைவு தின நிகழ்வில் கலந்து கொண்ட போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நீதி, நேர்மை குறித்து எந்த நாளும் பேசப்படுகிறது. எனினும் அவை அமுல்படுத்தப்படுகின்றனவா என்பது சந்தேகமாகவே உள்ளது. அனைவரும் இலங்கையர் என்ற ரீதியில் முதுகெலும்புடன் எழுந்து நின்று நீதி நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கவேணடும் என மேலும் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது நிலவி வரும் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும். தற்போதைய அரசியல் கலாசாரத்தை தலைகீழாக மாற்றி அமைக்க வேண்டுமாயின் இலங்கையர் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்.

இதேவேளை மீண்டும் இடதுசாரி அரசியல் பிரகாரம் ஒன்றை உருவாக்க ஒற்றுமையுடன் செயற்படவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# சட்டம் அமுலுக்கு வந்த உடனேயே 40 லொறிகள் கைப்பற்றப்பட்டது



(கொழும்பு)

பிளாஸ்ரிக் கொள்கலன் அல்லது திண்மக் கடதாசி அல்லது பலகையிலான பெட்டிகள் இன்றி மரக்கறிகள் மற்றும் பழவகைகளை ஏற்றி வந்த 40 லொறிகளை நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரிகள் நேற்றுக் காலை கைப்பற்றியதாகத் தெரிவித்துள்ளனர்.

மரக்கறிகள் மற்றும் பழங்கள் என்பவற்றை கொண்டுச் செல்லும் போது 25 தொடக்கம் 40 சதவீதமான சேதத்திற்கு உள்ளாகின்றது. இதனால் வருடத்திற்கு சுமார் 20 பில்லியன் ரூபாய்கள் நட்டம் ஏற்படுகின்றது.

இந்த நிலையில் மரக்கறி மற்றும் பழவகைகளை ஏற்றிச் செல்வதற்காக அனுமதிக்கப்பட்ட பொதியிடல் முறை நேற்று நள்ளிரவு முதல் கட்டாயமாக்கப்பட்டது. நேற்று நள்ளிரவின் பின்னர் இந்தப் பொதியிடும் முறையை பயன்படுத்தாமல் மரக்கறி மற்றும் பழவகைகளை ஏற்றிச் செல்வோருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன ஏற்கனவே அறிவித்திருந்தார். இதன்படி 13 வகையான பழங்கள் மற்றும் 24 வகையான மரக்கறிகளை ஏற்றிச் செல்வதற்காக அனுமதிக்கப்பட்ட பொதியிடல் முறை பயன்படுத்தப்பட வேண்டும்.

## பிளாஸ்டிக் சட்டத்திற்கு வர்த்தகர்கள் எதிர்ப்பு



சாக்குகளில் மரக்கறி பழங்கள் என்பவ ற்றை ஏற்றிச் செல்வதை தடை செய்து நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்துள்ள பிளாஸ்ட்டிக் பெட்டிச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வர்த்தகர்கள் நேற்றுக் காலை ஆர்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 5 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது பிளாஸ்டிக் பெட்டிகளில் மரக்கறி, பழங்களை ஏற்றிச் செல்லாத 40 லொறிகள் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து நுவரெலியா பொருளாதார மத்திய நிலையம், தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலைய வர்த்தகர்கள் சிலர் வீதியை மறித்து எதிர்ப்பு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## ரணில் தரப்பினருக்கு வெற்றி கிடைத்துள்ளது



(கொழும்பு)

இலங்கை தேசிய சேவையாளர் சங்கத்தின் அதிக ஆதரவு ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தரப்பினருக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

கட்சியின் மத்திய செயற்குழுவின் அதிகாரம் வழங்குவது தொடர்பில் நேற்று முன்தினம் வாக்களிப்பு இடம்பெற்றது.

இதன்போது ரணில் விக்ரமசிங்க தரப்பில் உறுப்பினர் ஒருவரும், கரு ஜயசூரிய தரப்பில் ஒருவரும் போடடியிட்டனர். இதன்போது இடம் பெற்ற இரகசிய வாக்களிப்பில் ரணில் தரபபாளர் வெற்றி பெற்றார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்திற்கு கரு ஜயசூரிய தகுதியானவர் என நேற்று முன்தினம் தேசிய சட்டத்தரணிகள் சங்கக் கூட்டத்தின் போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வருகை தந்த நூற்றுக்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்ததாக சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி உப்புல் ஜயசூரிய தெ[illegible]வித்துள்ளார்.

# கூட்டமைப்பு முன்வைத்த கோரிக்கை ஈழத்திற்கு நிகரானவையாகும்

(கொழும்பு)

ஈழ கோரிக்கைகளுக்கு நிகரான வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மூன்று நிபந்தனைகளை முன்வைத்துள்ளனர் என திவயின சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நாட்டின் அனைத்து மக்களுக்கும் பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்திய ஈழவாதத்தை எந்த வகையிலும் மீள தலைதூக்க விடக்கூடாது. சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய இனங்களைச் சேர்ந்த மக்களின் கலாசாரத்தையும், சமயத்தையும் இல்லாதொழித்த பிரபாகரனின் ஆவிகள் இன்னும் நாட்டில் உலாவுகின்றன.

எனினும், அரசாங்கம் பயங்கரவாதத்தை இல்லாதொழித்த காரணத்தினாலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அச்சமின்றி அரசியல் செய்யக்கூடிய ஓர் சூழ்நிலை உருவாகியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அண்மையில் முன்வைத்த வடக்கு, கிழக்கு மாகாண இணைப்பு, காணி, பொலிஸ் அதிகாரம் உட்பட்ட மூன்று நிபந்தனைகளும் அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமையப் பெற்றுள்ளது. ஈழ கோரிக்கைகளுக்கு நிகரான வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்த நிபந்தனைகளை முன்வைத்துள்ளனர் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறையில் தூக்கிட்டு தற்கொலை

(கொழும்பு)

அம்பாந்தோட்டை விளக்கமறியலில் சந்தேக நபர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார். கோத்தமீகம பகுதியைச் சேர்ந்த திருமணமான 47 வயதான ஒருவரே சிறுமி ஒருவரை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு இருந்தார்.

அம்பாந்தோட்டை கோத்தமீகம பகுதியில் வைத்து சிறுமி துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபரின் கையடக்கத் தொலைபேசி மூலம் சம்பவக் காட்சிகள் ஒளிப்பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில், அந்தக் காட்சிகளை கண்ணுற்ற மற்றுமொருவரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கைதான சந்தேகநபர் நேற்று முன்தினம் அம்பாந்தோட்டை நீதவான் முன்னிலை யில் ஆஜர்செய்யப்பட்ட பின்னர், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

# ஆசிரியர்களில் 15.53 சதவீதமே பயிற்றப்பட்டவர்கள்

(கொழும்பு)

கடந்தவாரம் நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின்படி கடந்த வருடம் நாட்டின் 215,638 ஆசிரியர்களில் 15.53 சதவீதமானோர் மாத்திரமே பயிற்றப்பட்டவர்களாக இருந்தனர். அதற்கு முந்தைய வருடம் இச்சதவீதம் 18.21 ஆக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாடுமுழுவதும் சமத்துவமான கல்வி மட்டத்தைப் பேணுவதற்கு இந்நிலை ஒரு தடையாகவுள்ளது எனத் தெரிவித்துள்ள கணக்காய்வாளர் நாயகம், ஆசிரியர் பயிற்சி நடைமுறைகளை கிரமமாக்கும்படி வலியுறுத்தியுள்ளார்.

# மூன்று இலங்கையர்களுக்கு மாலைதீவில் சிறைத்தண்டனை



(கொழும்பு)

மாலைதீவு நாடாளுமன்றக் குழுத் தலைவரான மூஸா மனிக்கிற்குச் சொந்தமான காரொன்றில் மலிந்த வகை மதுபானப் போத்தல்கள் காணப்பட்டமை தொடர்பான வழக்கில் மூன்று இலங்கையர்களுக்கு ஒரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சட்டத்துக்குப் புறம்பான வகையில் மாலை தீவுக்குள் மதுபானம் இறக்கியவர்களௌன குற்றம் காணப்பட்ட இஸுறு பிரியங்கர, நிரோஷன் டொன், முகைதீ முகமெட் ஆகிய மூன்று இலங்கையர்களுக்கும் தலா ஒரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இருப்பினும் இந்தக் குழுவின் தலைவரென கருதப்படும் பிரதான சந்தேக நபர் தப்பியோடிவிட்டார்.

இவ்வழக்கு விசாரணையின் போது மூஸா தெரிவித்ததாவது: தான் சிங்கப்பூரிலிருந்த வேளையில் தனது கார் சாரதிக்கு இலஞ்சம் கொடுத்து தனது காரில் மதுபான போத்தல்கள் வைக்கப்பட்டதாகவும், தனது அரசியல் செல்வாக்கை கெடுக்க வேண்டுமென சிலர் இதனைச் செய்வித்ததாகவும் தெரிவித்தார்.

## கஞ்சாப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட இருவர் கைது

(மட்டக்களப்பு)

ஆயித்தியமலை-திக்கந்த பிரதேசத்தில் கஞ்சாப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வந்த சந்தேகநபர்கள் இருவரை ஆயித்தியமலைப் பொலிஸார் நேற்று முன்தினம் காலை கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 66 கிலோக்கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், இருவரால் செய்கை பண்ணப்பட்ட ஒன்றரை ஏக்கர் நிலத்தில் செய்கை பண்ணப்பட்ட கஞ்சாப் பயிரை ஆயித்தியமலை சாஸ்த்ரவெலி முகாம் விசேட அதிரடிப்படையினர் அழித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் ஆயித்தியமலை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு, நேற்று மொனராகலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

# நாட்டில் யுத்தத்தின் பின் காணிப்பிரச்சினை

CPA
CENTRE FOR POLICY ALTERNATIVES

(கொழும்பு)

யுத்தத்தின் பின்னரான இலங்கையில் காணிப் பிரச்சினை மிகவும் முக்கியமான பிரச்சினையாக உருவாகியுள்ளது என மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது. குறிப்பாக வடக்கு மாகாணத்தில் காணி உரிமை தொடர்பான சர்ச்சைகள் உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆவணங்கள் காணாமல் போனமை, பாரியளவிலான இடம்பெயர்வு, வேறு தரப்பினர் காணிகளைப் பயன்படுத்துகின்றமை, காணியற்ற மக்கள், இராணுவத்தினர் காணிகளை பயன்படுத்துகின்றமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

காணி உரிமை தொடர்பான பிரச்சினைகளுக்கு காத்திரமான தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது. குறிப்பாக யுத்தம் இடம்பெற்ற வலயங்களில் காணிப் பயன்பாடு மற்றும் காணி உரிமை தொடர்பில் தெளிவான கொள்கைகள் வகுக்கப்பட வேண்டியது மிகவும் முக்கியமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தெளிவான கொள்கைகளை வகுத்து அதனை நடைமுறைப்படுத்துவதன் மூலம் வடக்குக் காணிப் பிணக்குகளைத் தீர்க்க முடியும் என குறிப்பிட்டுள்ளது.

அரசியல் தலையீடு, இராணுவ மயமாக்கள் உள்ளிட்ட இன்ன பிற காரணிகளினால் காணிப் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிப்படைத் தன்மையுடனும், பொதுமக்களின் பங்களிப்புடனும் வகுக்கப்படும் கொள்கைகள் பிணக்குகளுக்கு நடைமுறைச் சாத்தியமான தீர்வினை வழங்கும் என மாற்றுக் கொள்கைகளுக்காக கேந்திர நிலையம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

# ஹஜ் குறித்து பௌஸி பேச்சு

(கொழும்பு)

ஹஜ் யாத்திரை தொடர்பில் சகல முஸ்லிம் அரசியல்வாதிகளுடன், நகர அபிவிருத்தி சிரேஸ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விசேட சந்திப்பு எதிர்வரும் 20ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. முஸ்லிம் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், சகல கட்சிகளிலும் அங்கம் வகிக்கும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டவர்களை அமைச்சர் சந்திக்க உள்ளார்.

இதேவேளை, அடுத்த ஆண்டு ஹஜ் யாத்திரை மேற்கொள்ள விரும்புவோர் முன்கூட்டியே தங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு அமைச்சர் பௌசி கோரியுள்ளார்.



மட்டக்களப்பு மாவட்டத்தில் பேத்தாழை எனும் இடத்தில் கடந்த சனிக்கிழமை கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனால் பொது நூலகம் திறந்துவைக்கப்பட்டது.

# அரசாங்கத்தைத் தூக்கி எறிய அழைப்பு விடுக்கிறார் சோமவன்ச

(கொழும்பு)

இலங்கையில் இன்று அரசியல் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. சிறந்த கல்வி தொழில் என்பன கிடைக்கவில்லை. எனவே அனைத்து மக்களும் இணைந்து அரசாங்கத்தை தூக்கியெறிய முன்வரவேண்டும் என்று ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க கோரிக்கை விடுத்துள்ளார். இலங்கையில் தொடரும் வன்முறைகளுக்கு அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும். பேச்சுச் சுதந்திரம் மறுக்கப்படுவதன் மூலம் அரசாங்கமும் ஜனாதிபதியும் தமது கடமைகளில் இருந்து விலகியுள்ளமையை உணர முடிகிறது.

இந்த நிலையில் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு சம உரிமை மற்றும் சம சந்தர்ப்பம் என்பவற்றை உறுதிப்படுத்தும் போதே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்படும் என்று கருத்து வெளியிட்டுள்ளார்.

# 10 கோடி பெறுமதியான போதைப் பொருள் மீட்பு

(மன்னார்)

மன்னார் தாழ்ப்பாடு பிரதேசத்தில் இருந்து 10 கோடி ரூபா பெறுமதியான போதைப் பொருட்கள் கடற்படையினரால் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் நான்கு கிலோக் கிராம் எடையுடைய பிறவுண் சுகர் மற்றும் ஹெரோயின் ஆகிய போதைப் பொருட்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

மேலும் போதைப் பொருட்களுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து ஒன்பது சிம் அட்டைகளும், 2000 ரூபா இந்திய நாணயமும் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நுவரெலியாப் பிரதேச சபை ஐ.தே.க.உறுப்பினர் ஐ.ம.சு.கூட்டமைப்பில் போட்டியிட்டவர் மீது தாக்குதல்

(கொழும்பு)


சுயாதீன ஊடகவியலாளரும் கடந்த பிரதேச சபைத் தேர்தலில் ஐ.ம.சு.கூட்டமைப்பில் போட்டியிட்டவருமான தியாகுவுடன் நுவரெலியா பிரதேச சபையின் ஐ.தே.கட்சி உறுப்பினர் ஒருவர் கைகலப்பில் ஈடுபட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, நேற்றுமுன்தினம் இரவு நுவரெலியா மாவட்ட ஊடக சம்மேளனத்தின் அபிவிருத்திக் கூட்டம் தொடர்பாக அவ்வமைப்பின் தலைவர் டக்ளஸ் நானயக்காரவுடன் செயலாளர் தியாகு விடுதியொன்றில் வைத்து உரையாடிக் கொண்டிருந்திருக்கிறார். அதே விடுதியில் நுவரெலியா பிரதேச சபையின் ஐ.தே.க. உறுப்பினரும் ஆதரவாளர்கள் சிலரும் இருந்துள்ளனர். இச்சந்தர்ப்பத்தில் தியாகுவிற்கும் பிரதேச சபை உறுப்பினருக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளராக தியாகு செயற்பட்டதை குறிப்பிட்டு ஐ.தே.க. பிரதேச சபை உறுப்பினர் திட்டியிருக்கிறார். இவ்வாய்த்தர்க்கம் இறுதியில் கைகலப்பாக மாறியுள்ளது. விடுதியிலுள்ள கதிரைகளினால் பலமாகத் தாக்கியிருக்கிறார்கள். இத்தாக்குதலில் முச்சக்கர வண்டியொன்றில் வந்த சிலரும் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இச்சம்பவம் தொடர்பாக நுவரெலியா பொலிஸ் விசாரணைகளை முடுக்கிவிட்டிருப்பதாகவும் தெரிவித்தனர்.

# குளங்களில் 15 இலட்சம் மீன்குஞ்சுகள்

(கொழும்பு)



தேசத்துக்கு மகுடம் அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் அநுராதபுர மாவட்டத்தில் நன்னீர் மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் 15 இலட்சம் மீன்குஞ்சுகள் குளங்கள் பலவற்றிலும் விடப்படவுள்ளதாக மாகாண நீர்ப்பாசன நன்னீர் மீன்பிடி அபிவிருத்தித்துறை அமைச்சர் ஆர்.எம்.கே.பீ.ரத்னாயக்க தெரிவித்தார்.

நன்னீர் மீன்பிடித்துறையை விருத்தி செய்வது தொடர்பாக மாகாண அமைச்சின் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இத்திட்டத்திற்கென அரசாங்கம் முதற்கட்டமாக ஏழு இலட்சத்து எழுபதாயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# 70 பணிப்பெண்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

குவைத்தில் தொழிலுக்காகச் சென்று நிர்க்கதியான 70 பணிப் பெண்கள் நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளனர்.

பல்வேறு பிரச்சினைகள் மற்றும் வீட்டுரிமையாளர்களின் துன்புறுத்தல்கள் காரணமாக, பணியாற்றிய வீட்டிலிருந்து தப்பிச் சென்று குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைந்திருந்த பெண்களே நாடு திரும்பியுள்ளனர்.

குவைத்தில் தொழிலுக்குச் சென்று நிர்க்கதியான 100 பணிப் பெண்கள் கடந்த ஐந்தாம் திகதி நாடு திரும்பியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இன்னும் 300 இற்கும் அதிகமான பணிப் பெண்கள் தூதரகத்தில் தங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது.

# இரத்தினபுரியில் விபத்து முப்பது பேர் காயம்

(கொழும்பு)

இரத்தினபுரி கிங்கினி சந்தியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற பேருந்து விபத்தில் 30 பேர் காயமடைந்துள்ளனர். அதிகாலை ஒரு மணியளவில் மௌராகலையில் இருந்து கொழும்பை நோக்கிப் பயணித்த பேருந்து வீதியை விட்டு விலகி வர்த்தக நிலையமொன்றில் மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பேருந்தில் ஏற்பட்ட தொழிநுட்பக் கோளாறே இந்த விபத்துக்கான காரணம் என்பது தெரியவந்துள்ளது. விபத்தில் காயமடைந்தவர்கள் இரத்தினபுரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



ஆனைக்கோட்டை தென்னிந்திய திருச்சபை முன்பள்ளி சிறார்களின் ஒளி விழா நிகழ்வில் கலை நிகழ்வில் பங்குகொள்ளும் மாணவர்களையும், வழிபடுத்திய ஆசிரியர்களையும் காணலாம்.

# காஸனோவா

மனிதகுல வரலாற்றிலேயே மிகப் பெரிய seducer ஆகவும் மிகப் பெரிய காதலனாகவும் என்று கருதப்படும் காஸனோவா (Giovanni Giacomo Casanova) 1725 ஆம் ஆண்டு வெனிஸில் பிறந்தவர். சாகசக் கதைகளில் வருவதை விடவும் அதியற்புத சாகசங்கள் நிறைந்தது அவர் வாழ்க்கை. சுமார் பத்து மனிதர்களின் வாழ்வை அவர் ஒருவரே வாழ்ந்து தீர்த்தார் என்று சொல்லலாம். 73 ஆண்டுகள் வாழ்ந்த காஸனோவாவுக்கு 122 காதலிகள் இருந்தனர். தனது இறுதி நாட்களில் மிகக் கொடுமையான தனிமையில் ஒரு நூலகராக வாழ்ந்த நிலையிலும் கூட அவருக்கு ஒரு காதலி இருந்தாள். காதலியின் வயது 22.

ஒரு பெண்ணுக்கு எது தேவையோ அதைக் கொடுத்தவர் காஸனோவா. நட்பு தேவையெனில் நட்பு. கண்ணீர் தேவையெனில் கண்ணீர்.




காஸனோவா கபாலா மாந்திரீகமும் அறிந்தவர் என்று வதந்தி பரவியதால், அவரால் அரசுக்கு ஆபத்து என்று கருதிய ஆட்சியாளர்கள் அவரைக் கைது செய்து ஐந்து ஆண்டுகள் தண்டனை விதித்து சிறையில் அடைத்தனர். ஆனால் ஒன்றரை ஆண்டுகளில் சிறையிலிருந்து தப்பிய காஸனோவா பரீசுக்கு வந்தார்.

கடுமையான சிறைக் காவலிலிருந்து தப்பிய செய்தி ஐரோப்பா முழுவதும் பரவி பல நாடுகளிலும் காஸனோவாவின் புகழ் பரவியது. பாரீஸ் நகரில் அவரே முதன்முதலாக லொத்தரை அறிமுகம் செய்துவைத்தார். அதன் பலனாக கோடீஸ்வரரானார்.

வால்டேர், ரூஸோ, 15 ஆம் லூயி, இசைமேதை மொஸார்ட் போன்றவர்களின் நண்பனாக இருந்த காஸனோவா மிகப்பெரிய பயணியாக பல நாடுகளைச் சுற்றினார். ஐரோப்பாவில் அவர் கால் படாத இடமே இல்லை என்று சொல்லும் அளவுக்குப் பயணம் செய்தார். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு நகரிலும் ஏதாவதொரு காரணம் குறித்து அவர் வெளியேற்றப்பட்டார். பண மோசடி, பெண்கள் பிரச்சினை, மாந்திரீகம் இப்படி பல காரணங்கள்.

காஸனோவா ஒரு வயலின் கலைஞர், மொழிபெயர்ப்பாளர், கவிஞர், தத்துவவாதி, சூதாடி, பயணி. மேலும் ஒரு சில நாடுகளுக்காக உளவாளியாகவும் இருந்திருக்கிறார். அவருடைய மொழிபெயர்ப்புகளில் முக்கியமானவை: ஹோமரின் இலியட் மற்றும் வால்டேர். எல்லாவற்றையும் விட காஸனோவாவின் வாழ்க்கையை அர்த்தபூர்வமாக்குவது அவர் மிகப் பெரிய காதலனாக இருந்தார் என்பதுதான்.

1787 ஆம் ஆண்டு அவர் ப்ராக் நகரில் மொஸார்ட்டை சந்தித்தார். அக்காலகட்டத்தில் காஸனோவா எழுதி வெளியிட்ட நாவலால் மீண்டும் அங்கிருந்து நாடு கடத்தப்பட்டார். ஐந்து தொகுதிகளாக எழுதப்பட்ட மிகப்பெரிய நாவல் அது.

காஸனோவாவுக்கு 122 காதலிகள் இருந்தபோதிலும் அவர் உயிருக்குயிராகக் காதலித்த ஒரே பெண் ஹென்றீத். தனது இறுதிக்காலத்தில் மீண்டும் அவளைத் தொடர்பு கொள்கிறார் காஸனோவா. ஹென்றீத்திடமிருந்து பதில் வருகிறது: "இப்போதும் உன்னைத்தான் நான் காதலிக்கிறேன். ஆனால் நீ இங்கே வரவேண்டாம். அனாவசியமான ஊர்வம்பு உண்டாகும். உனக்கு பணத்தேவை ஏற்பட்டால் எப்போது வேண்டுமானாலும் எனக்குத் தகவல் சொல். என் பணப்பெட்டி உனக்காக எப்போதும் திறந்தே இருக்கும்." ஹென்றீத் அப்போது பணக்கார விதவையாக இருந்தாள்.

1790 இல் தனது நண்பரின் அரண்மனை போன்ற வீடு ஒன்றில் நூலகராகப் பணியாற்றியபடி தன் வாழ்க்கை வரலாற்றை எழுதத் தொடங்கினார். தனது வாழ்வின் 1744 ஆம் ஆண்டு வரைதான் அதில் எழுதினார். 1971 ஆம் ஆண்டுதான் அது ஆங்கிலத்தில் 12 தொகுதிகளாக வெளிவந்தது. அதுமட்டுமல்ல, அவர் சாகும்போது அவர் பக்கத்தில் அவர் எழுதிப் பிரசுரமாகாத 8000 பக்கங்கள் இருந்தன.

இன்றுவரை அவை பிரசுரமாகவில்லை. தவிரவும், அவரது வாழ்க்கை வரலாறும் முழுமையாக முடிவுறவில்லை, பாதியிலேயே நின்றுபோனது.

காஸனோவாவின் இறுதி வரிகள்: "நான் ஒரு தத்துவவாதியைப் போல் வாழ்ந்தேன். ஒரு கிறிஸ்தவனாக சாகிறேன்."

மனித வரலாற்றின் மிகப்பெரிய காதலனாகக் குறிப்பிடப்படும் காஸனோவா 1798 ஆம் ஆண்டு ஜூன் 4 ஆம் திகதி இறந்தார்.

---

# சுதந்திர பூமி

**1973** இல் வெளிவந்த "சுதந்திர பூமி" சோசலிஸத்தை நக்கலடிக்கும் பிரதியென்று இந்திரா பார்த்தசாரதி நினைத்துக்கொண்டு எழுதியிருக்கிறார். பார்ப்பன டி.என்.ஏ. என்பதால் தமிழகத்தை விட்டு துரத்தப்பட்ட (எத்தினி கதை சார் இதே டெம்ப்ளேட்டுலே எத்தினி பேரு எத்தனை காலத்துக்கு எழுதுவீங்க) இளைஞன் ஒருவன், டெல்லிக்குப் போய் ஒரு எம்.பி.க்கு சமையல் வேலை செயது, அவரது நம்பிகைகையைப் பெற்று, 72 தேர்தலில் மத்தியப் பிரதேசத்தில் நின்று வென்று, மத்திய அமைச்சர் ஆகிறான் என்று போகிறது கதை. பெரும்பாலும் மூன்றே மூன்று கதாபாத்திரங்கள், அரசியல் பேசுகிறோம் என்று எப்போதும் மொக்கை போட்டுக் கொண்டே போகிறார்கள். அரசியல் எனபதால் இடையிடையே மைல்டாக "செக்ஸ்" வருகிறது. அதையும் நேரிடையாக வெளிப்படுத்த இ.பா.வுக்கு துணிச்சல் இல்லை.




இ.பா.வின் பெரும்பாலான கதைகளில் டெல்லிதான் களம். அவர் அங்கு வாழ்ந்தார் என்பதே இதற்கு காரணம். இந்நாவலும் விதிவிலக்கல்ல. அமெரிக்காவிலேயே "க்ரீன் கார்ட்" வாங்கி செட்டில் ஆகிவிட்டாலும், இங்கிருக்கும் தி.க.,வையும், தி.மு.க.வையும் பார்த்து வயிறெரிவதுதான் பார்ப்பன அடிப்படைக் கருத்தியல். தமிழகத்தின் 97 சதவிகிதம் பேர் முட்டாள்கள் என்பதையே திரும்ப, திரும்ப வேறு வேறு வார்த்தைகளில், வேறு வேறு வடிவங்களில் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். இ.பா.வும் இந்த "சோசலிஸ பகடி"க் கதையில் (கதையோடு ஒட்டா விட்டாலும்) அதை இரண்டு அத்தியாயங்களுக்கு விரிவாகச் சொல்கிறார்.

வட இந்திய எம்.பி., சென்னைக்கு வருகிறார். அவரோடு நம் "பார்ப்பன" நாயகனும் காரியதரிசியாக வருகிறார். தமிழக அரசியல் தத்துவ விசாரங்களை உரையாடல்களாக இருவரும் நிகழ்த்துகிறார்கள். வடநாட்டு எம்.பி. சொல்கிறார் "பெரியார்தான் உங்களுக்கு டான் க்விஸாட் என்றால் நீங்களெல்லாம் எவ்வளவு பெரிய முட்டாள்கள்?"

தமிழ் அரசியல் வட இந்திய அரசியல்வாதிகளுக்கு வேப்பங்காய்தான். ஆனாலும் இ.பா. இந்தப் போக்கை நியாயப்படுத்துகிறார். ஏனென்றால் தமிழர்கள் முட்டாள்கள் என்றுதானே அவரும் நம்புகிறார்? இல்லாவிட்டால் ராமராஜ்யம் நடத்திய ராஜாஜியை வீழ்த்திவிட்டு காமராஜர் வந்திருப்பாரா? அவருக்குப் பிறகு சூத்திரக் கட்சியான தி.மு.க பெரும்பான்மை பெற்றிருக்குமா?

இந்நாவலை வாசிக்கும்போது தெளிவாகவே தெரிகிறது. பார்ப்பனக் கருத்தியலின் அஜெண்டா எப்போதுமே ஒன்றே ஒன்றுதான். அதன் வடிவங்களும், பிரச்சாரகர்களும் மாறுவார்களே தவிர, அக்கருத்தியலின் நோக்கம் மாறவே மாறாது. நாற்பதாண்டுகளுக்கு முன்பாக எதை சொல்லி வந்தார்களோ, அதையேதான் இன்றும் சொல்லி வருகிறார்கள்.

பார்ப்பனக் கருத்தியல் எப்போதுமே ஒழுக்கத்தை சுட்டிக் காட்டி தனது எதிரிகளை ஒடுக்கும். எதிரி, தான் ஒழுக்கக் குறைவானவன்தானோ என்று அவனையே நம்பச் செய்து குற்றவுணர்ச்சிக்கு ஆளாக்கும். டி.என்.ஏ பாரம்பரியமல்லாமல், நவீன பார்ப்பனர்களாக உருவெடுத்து வரும் அரசியல் விலக்கு செய்யப்பட்ட, ஒரு மொண்ணையான சூத்திரப் பரம்பரைக்கு "சுதந்திர பூமி" இவ்வாறான ஒரு குற்றவுணர்ச்சியை வெற்றிகரமாக ஏற்படுத்தும்.

*- யுவகிருஷ்ணா*

---

# சொந்த மக்கள் மீதுள்ள அச்சமே பாதுகாப்பு செலவுக்கு அதிக நிதி

இலங்கையின் வரவு செலவுத் திட்டத்தில் அதிக செல்வாக்கை செலுத்துவது அச்சத்தின் காரணமாக உருவாகும் ஒருவகை உளவியலே. இதற்காகவே அது அதிக நிதி ஒதுக்கீட்டையும் மனிதவளப் பயன்பாட்டையும் பாது காப்புக்கெனக் கோருகிறது.

தற்போது வடக்கு, கிழக்கில் நிரந்தரப் படை முகாம்களை அமைப்பதற்காக அரசு தீர்மானித்திருப்பதும், அதற்காக தனியாகவே நிதி ஒதுக்கீட்டைச் செய்திருப்பதும் இத்தகைய அச்சத்தின் காரணமாகவே.

மீண்டும் கிளர்ச்சிகளோ, ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளோ நிகழலாம் என்ற அச்சத்தின் வெளிப்பாடே இது.

இந்த முன்னெச்சரிக்கையின் உள்ளே வலைப்பின்னலாக இருப்பது அச்சமே. உண்மையில் வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல, இலங்கை முழுவதுமே இராணுவமயப்படுத்தப்பட்ட ஒரு சூழலே இன்றுள்ளது. இது தற்போதைக்கு நீங்கப் போவதும் இல்லை.

வடக்கு, கிழக்கிலிருந்து மட்டும் அரசுக்கு நெருக்கடிகளும் அபாயங்களும் ஏற்படவில்லை. தெற்கிலிருந்தும் அபாயங்கள் வந்திருந்தன. எனவே, நாடு முழுவதையும் இராணுவக் கண்காணிப்பின் கீழ் வைத்திருப்பதே அரசின் நோக்கமாகும்.

அரசுக்கு எப்போதும் எல்லோரின் மீதும் ஒரு அவநம்பிக்கை உண்டு. இந்த அவநம்பிக்கையே அச்சத்தின் காரணமாக உருவாகியதுதான். இது ஒரு தீரா நோயைப் போல நீடித்துக்கொண்டே செல்கிறது என்றபடியால்தான், அது ஊடகங்கள், ஊடகவியலாளர்கள், கட்சிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள், மாற்றுச் சிந்தனையாளர்கள், தொழிற்சங்கங்கள் போன்ற அனைத்துத் தரபபையும் தனக்கு சார்பாக வைத்திருக்க முயற்சிக்கிறது. தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முயற்சிக்கிறது அல்லது தன்னால் கட்டுப்படுத்த முடியாதபோது அவற்றை நிர்மூலமாக்க நினைக்கிறது.


ஆகவே, ஆட்சி பீடமென்பது அதனை அறியாமலே உச்ச உளவியல் நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டே போகிறது. இவ்வாறான ஒரு நிலையில் பயணிக்கும் எந்த அரசும் எந்தத் தரப்பும் மீண்டதாக வரலாறே இல்லை. எல்லாக் கதவுகளையும் மூடி மூடி இறுதியில் முற்றாகவே மூடுண்ட ஒரு நிலையையே இது சென்றடையும்....

ஆகவே, உள்நாட்டில் உள்ள முரண்நிலைகளை அகற்றுவதற்கான கவனத்தையும், அக்கறையையும் அரசு முதனிலைப்படுத்துவது அவசியம். முரண்நிலைகள் அகற்றப்படும்போது அச்சநிலை தணிந்து விடும். அபாயங்களை உருவாக்குவதற்கும் நெருக்கடிகளை ஏற்படுத்துவதற்குமான காரணிகளை நீக்கினால், அவை ஏற்படுவதற்கான சந்தர்ப்பமும் அற்றுப்போய்விடும்.

இல்லையெனில், கோடிக்கணக்கான ரூபாய்களை தேவையற்ற முறையில் செலவழித்து, உள்நாட்டு நெருககடிகளை பராமரிப்பதாகவே அமையும். இதற்கு நிரந்தரப் படைமுகாம்களோ, படைவிருத்தியோ, பொருளாதார செலவுகளோ நிரந்தரத் தீர்வைத் தந்துவிடாது.

பதிலாக முரண்நிலைகளை அகற்றுவதன்மூலம் நாட்டின் அமைதியும் அபிவிருத்தியும் ஜனநாயகமும் செழித்தோங்கும்.

உள்நாட்டு நெருக்கடி மட்டுமல்ல, உள்நாட்டு சக்திகளைப் பயன்படுத்தி வெளிச் சக்திகள் உள விவகாரங்களில் தலையிடுவதையும்



கட்டுப்படுத்தலாம்.

ஆகவே, நிரந்தர சுபீட்சத்தை நோக்கி சிந்திக்கும் ஒரு முறைக்கு, மரபான சிந்தனை முறையைக் கடந்து புதிய சிந்தனை முறைக்கு அரசும் தலைவர்களும் செல்லவேண்டும்.

இன்றைய சூழல் நமக்கெல்லாம் பெரும் படிப்பினைகளைத் தந்திருக்கும் சூழல். இதை ஒரு வளமான அடிப்படையாகக் கொண்டு புதிய வெளிகளைத் திறக்க வேண்டும்.

ஆம், இது கதவுகளைத் திறக்கும் காலம் மனித விதியென்பது எல்லாவற்றையும் திறப்பதில்தான் அமைகிறது. புதிர்களை அவிழ்ப்பதும் நெருக்கடிகளைத் தவிர்ப்பதும் அவற்றை இல்லாதொழிப்பதுமே அரசியல் அறிவும் அரசியல் அறமுமாகும்.

ஆகவே, பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் நிரந்தரப் படைமுகாம்களை அமைப்பதற்கான முயற்சிகள் என்பதை விட தீர்வுகளை நோக்கிய பயணத்தைப் பற்றிச் சிந்திப்பதே இன்றைய தேவையாகிறது.

*- கிருஷ்ணமூர்த்தி கட்டுரையிலிருந்து...*

**ஈழத் தமிழர்களின் விடிவெள்ளி!**
**வருங்கால தமிழ்நாட்டு முதலமைச்சர்!!**
**புலன்பெயர்ந்த தமிழர்களின் தேசியத்தலைவர்!!!**
**உலகின் ஒரேயொரு தூய தமிழன் சீமான் அவர்களுக்கு...**


(இணையத்தில் வெளியான பச்சைத் தமிழன் கடிதத்திலிருந்து)

சமீபகாலமாக உங்களைக் கவனித்து வந்ததில், உங்களை மிஞ்ச யாருமே இல்லை என்னும் அளவிற்கு, உங்களது பேச்சுக்களும் நடவடிக்கைகளும் இருக்கின்றன. மறைந்தும் மறையாத தேசியத்தலைவர்? பிரபாகரனுக்கு அடுத்தபடியாக நீங்கள் தான் எமது கண்களுக்குத் தேசியத் தலைவராகத் தெரிகின்றீர்கள். வையாபுரி கோபாலசாமி, நெடுமாறன், திருமாவளவன், ராமதாஸ், ஈழத்தவர்களான உருத்திரகுமார், விநாயகம்? நெடியவன்? போன்றவர்களெல்லாம் உங்கள் கால்தூசுக்கும் பெறமாட்டார்கள். இவர்களை நம்பி எந்தப் பிரயோசனமும் இல்லை என்பது எமக்குப் புரிந்து விட்டது. விரைவில் பெரும்படை ஒன்றைத் திரட்டிக்கொண்டு வந்து, வன்னிக் காட்டில் இருந்துகொண்டு இலங்கை இராணுவத்துக்குப் பதிலடி கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கிறோம்.

மறைந்த தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களுக்கு உணர்ச்சியாகப் பேசத் தெரியாது. மாவீரர்தின உரை நிகழ்த்தும் போது அவர் முகத்தில் எவ்வித உணர்ச்சியும் தெரியாது. அவர் முகத்தில் சரியாக வாசித்து முடித்து விட வேண்டுமென்ற படபடப்பு மட்டும் தான் காணப்படும். ஆனால் நீங்களோ உணர்ச்சிப் பிழம்பு. வாய்ச் சொல் வீரன். நீங்கள் பேசும்போது வார்த்தைகள் வரிசை கட்டி வருகின்றன.

நீங்கள் ஒரு தூய தமிழன். அதோடு பட இயக்குனர். அறிவாளி. பேச்சாற்றல் மிக்கவர். உங்கள் தலைமையில் எமது போராட்டம் வெல்வது நிச்சயம். நம்புங்கள் தமிழீழம் நாளை மலரும் என்று பாடி வைத்தது உங்களை நம்பித்தானோ என்னவோ?

கடலூரில் உங்களது கட்சி சார்பாக நடத்தப்பட்ட மாவீரர் தின கொண்டாட்டத்தில் நீங்கள் பேசிய பேச்சை காணொளியில் பார்க்கும் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நீங்கள் உணர்ச்சிவசப்பட்டு பேசுவதைப் பார்த்த போது நான் மெய்சிலிர்த்துப் போனேன். உங்களது முதலமைச்சர் கனவையும் பேச்சோடு பேச்சாகப் போட்டு உடைத்து விட்டீர்கள். "ஐந்து வருடங்கள் என்னை சிறையிலிட்டால் அடுத்த முதலமைச்சர் நான் தான்" என்ற உங்கள் பேச்சு உலக மேடைப்பேச்சு வரலாற்றிலே யாருமே உபயோகித்திராத வீரவசனம்.



அந்த உங்கள் முதலமைச்சர் ஆசை, தமிழ்நாட்டிலுள்ள பலருக்கு வயிற்றில புளியைக் கரைத்துவிட்டது. ஜெயலலிதா, கருணாநிதி, விஜயகாநத். வையாபுரி கோபாலசாமி, ஸ்ராலின் மற்றும் நடிகர் விஜய் போன்றவர்கள் உங்களையிட்டு எச்சரிக்கை கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள். உங்களை ஐந்து வருடம் சிறையில் போட்டால் நீங்கள் முதலமைச்சராக வந்து விடுவீர்களோ எனப் பயப்பட ஆரம்பித்து விட்டார்கள்.

நாம் தமிழர் கட்சியில் சேராதவர்கள் நல்ல தாய் தகப்பனுக்குப் பிறக்காதவர்கள் என்கின்ற பேச்சுத் தான் எம்மை வியப்பின் எல்லைக்கே கொண்டு சென்றுவிட்டது. எமது தாய் தகப்பனின் மானத்தைக் காப்பாற்றுவதற்காக நான் உடனடியாக நாம் தமிழர் கட்சியில் சேர முயன்று வருகிறேன். தயவுசெய்து நாம் தமிழர் கட்சியின் இலங்கை முகவரியை தெரியத்தரவும்.

கனடிய குடிவரவு அதிகாரிகள் தடுத்து வைத்த போது பிரபாகரன் பற்றிய பாட்டுப் பாடியதையும் . அதற்கு அவர்கள் உனக்கு விசர் இல்லைத்தானே என்னும் பொருள்பட கேட்டதாகவும் பெருமையாகப் பேசினீர்கள். இந்த அசிங்கங்களையெல்லாம் ஏன் மேடையில் சொல்லுகின்றீர்கள். நாளை நீங்கள் முதலமைச்சராக வரும்போது இவையெல்லாம் சாட்சிக்கூண்டுக்கு வந்து விடுமல்லவா? குடிவரவுத் துறையினர் தடுத்து வைத்திருந்த சில மணி நேரத்துக்குள் வயிற்றைக்கலக்கி மூன்று நாலு தடவை கழிவறை போய வந்ததை மறைத்தது மாதிரி, பாட்டுப் பாடி விசர்ப் பட்டம் பெற்றதையும் மேடையில் சொல்லாமல் விட்டிருக்கலாம்.

நாங்கள் மாறமாட்டோம். எங்களை மாற்றவும் முடியாது என்றும் கூறினீர்கள். புலிகளின் பணப் பட்டுவாடா இருக்கும்வரை நீங்கள் மாறமாட்டீர்கள் என்பது எமக்குத் தெரிந்த் ஒனறுதான். தென்னமெரிக்க நாடொன்றில் வைத்து கைமாறப்பட்ட பெருந்தொகைப் பணம் பற்றி நீங்களும் கூட்டத்தில் பேசவில்லை. நானும் அதுபற்றி உங்களிடம் எதுவும் கேட்கப் போவதுமில்லை.

புலிகளின் பணத்தைப் பெற்றுக் கொண்டு வந்துதான் நாம் தமிழர் கட்சி ஆரம்பித்தது என்பது உங்களுக்கும் எங்களுக்கும் மட்டுமே தெரிந்த பரமரகசியம். என்ன சில வேளை வையாபுரியிற்கும் புரிந்திருக்கும் ஏனென்றால், அவரும் உங்கள் வழியில் கட்சி ஆரம்பித்தவர்தானே.

அதுசரி இந்த நடிகை விஜயலட்சுமி விடயத்தை எப்படி சரிக்கட்டினீர்கள் என்பது தான் எனக்குப் புரியவில்லை. அதுவும் புலிக்காசு தானா? இன்னுமொன்று மறந்தே போய்விட்டது. சிங்கள நடிகை ஒருவரை தொடர்ந்தும் உங்கள் படங்களில் கதாநாயகியாகப் போட்டு படம் எடுத்து வந்தீர்கள் அல்லவா? அந்த சிங்கள நடிகையை வைத்து புது பூஜா ஒன்றும் போடவில்லையா?

இலங்கைத் தமிழருக்கு இந்த நாட்டில் என்ன பிரச்சினை?

அதை எவ்வாறு தீர்த்து வைக்கலாம்? இது சம்பந்தமாக உங்களுக்கு ஏதாவது உருப்படியான, அடிப்படையான அறிவு இருக்கிறதா?

உங்களது அநாகரீகமான மேடைப் பேச்சுக்கான விடயம் என்பதால் நானும் சற்று அநாகரீகமாக எழுத வேண்டி ஏற்பட்டுவிட்டது. என் சந்தேகங்களுக்கு அடுத்த கூட்டத்தில் பதிலளித்து, நீங்கள் நல்ல தாய் தகப்பனுக்கு பிறந்தவர் என்பதை நிரூபித்துக் கொள்ளுங்கள்.

**செந்தமிழ் சீமானே வா வா.**
**தமிழீழம் பெற்றுத் தா தா.**
**நீ செந்தமிழன் என்றால் நான்**
**பச்சைத் தமிழன்.**

---

# அதிதீவிரப் போக்குகள் ஆபத்தையே தரும்!

இலங்கையின் வட- கிழக்கு பிரதேச அரசியல் தீர்வு தொடர்பாக அனைத்துக் கட்சி தெரிவுக் குழுவில் தொடங்கி தற்போது பாராளு மன்ற தெரிவுக்குழுவில் வந்து நிற்கிறது. அனைத் துக் கட்சி தெரிவுக்குழு மூலம் பேசப்பட்டு ஒரு தீர்வு எட்டப்பட்டாலே, அது முழுமையானதாக இருக்கும்.

பாராளுமன்ற தெரிவுக்குழு என வரும்போது, பாராளு மன்றத்தில் அங்கம் வகிக்காத கட்சிகள் இதில் தங்கள் கருத்துக்களை சொல்ல வாய்ப்புகள் இல்லாமல் போய்விடுகிறது. குறிப்பாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மட்டும் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதால், அதில அங்கம் வகிக்காமலும், பாராளுமன்றத்தில் அங்கத்துவம் இல்லாமலும் இருக்கும் தமிழ் கட்சிகள் தங்கள் கருத்துக்களைச் சொல்ல களம் இல்லாமல் போய் விடுகிறது.

ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு கொள்கை கோட்பாடு இருந்திட்டுப் போகட்டும். தீர்வு விடயத்தில் "தமிழர் தீர்வுப்பொதி" ஒன்றை இவர்களால் ஏன் ஏற்படுத்த முடியவில்லை.

அப்படியாக உருவாக்கப்படும் தீர்வுப் பொதியானது, இலங்கையில் உள்ள சகல இனங்களுடனும் சோந்து வாழும் தன்மையுள்ள தாக இருக்க வேண்டும். இன ஒற்றுமையையும், சகோதரத்துவத்தையும் அது வெளிப்படுத்த வேண்டும்

இலங்கை அரசாங்கத்துக்கும் - தமிழ் தேசிய கூட்டமைப்புக்குமான அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தை பல சுற்றுக்கள் நடைபெற்று தற்போது முறிந்து போய் நிற்கிறது. தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் மட்டும்தான் பேச வேண்டும் என்ற எண்ணம் கூட்டமைப்புக்கு உள்ளது. அரசாங்கத்துக்கும் அவர்களுடன் மட்டும்தான் பேச வேண்டும் என்ற எண்ணம் இல்லா விட்டாலும், சில நெருக்கடிகளால் அதை அவர்கள் தவிர்க்க முடியாமல் செய்வதும் தெரிகிறது.

இலங்கையில் உள்ள தமிழ் கட்சிகள் அனைத்தும் தமிழர்களுக்கு தீர்வு கிடைக்க வேண்டும் என்று கூறுகின்றன. தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு அரசாங்கத்துடன் பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது. ஆனால், அவர்கள் சொல்லும் காரணங்களை அரசாங்கமும், அரசாங்கம் சொல்லும் காரணங்களை அவர்களும் உடன் பட்டுக் கொள்ளுவதில் இழுபறியாக இருக்கிறது.

தாங்கள் சொல்லும் விடயங்களை ஏற்றுக் கொண்டு அரசாங்கம் பணிந்து விட்டால்தான், அது தாங்கள் அரசியல் செய்வதற்கு சாதகமாக அமையும் என்று கூட்டமைப்பு நினைக்கிறது. அரசாங்கமோ, தாங்கள் சொல்லும் விடயங்களைக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ள வைப்பதன் மூலம் தங்கள் அரசியலுக்கும், இனவாத சக்திகளிடம் இருந்து தப்புவதற்கும் முடியும் என்று நினைக்கிறது.

இப்படியாக இழுபறி நிலையில் போருக்குப் பின் ஒரு அரசியல் தீர்வு ஏற்பட்டு விடும் என எதிர்வு கூறிய அனைவருக்கும் ஏமாற்றத்தையே கொடுக்கிறது.

இலங்கை அரசாங்கம் புலிகள்தான் சகலவற்றும் நந்திக்கல்லாக இருக்கிறார்கள் என கூறி வந்தது, தற்போது அது இலாதபோது ஏன் அரசியல் தீர்வை வைக்க தயங்குகிறது? அபிவிருத்தியைச் செய்தால் தமிழர்களின் அரசியல் தீர்வு விடயம் மறக்கப்பட்டு விடும் என்று அது நினைக்கிறதா, அப்படி எண்ணி இருந்தால், அது தமிழர்களிடையே அரசாங்கத்தின் மேல் வெறுப்பையே ஏற்படுத்தும்.

பாராளுமன்ற தெரிவுக்குழு மூலமோ அல்லது இன்ன பிற வழிகளிலோ கிடைக்கும் தீர்வானது மூவின மக்களும் துன்பப்படாமல் வாழ வகை செய்யும் தீர்வாக அமையவேண்டும்.

அதி தீவிர போக்குகள் என்றும் ஆபத்தானவை. அது நாடாக இருக்கட்டும், பிரதேசமாக இருக்கட்டும், மாவட்டமாக இருக்கட்டும், ஊராக இருக்கட்டும், சாதியாக இருக்கட்டும், மதமாக இருக்கட்டும், மொழியாக இருக்கட்டும். இவற்றைத் தூண்டி விடுவது சுலபம். அதில் குளிர்காய்வது மக்களல்ல.

**அருள். விஜயன்**
**கட்டுரையிலிருந்து...**

---

# ஐபிஎல் தூதுவர் அமலா பால்!



அடுத்த ஆண்டு சென்னையில் நடைபெறவுள்ள ஐபிஎல் 20-20 கிரிக்கெட் போட்டிகளின் விளம்பரத் தூதுவராக முதலில் த்ரிஷாவை ஒப்பந்தம் செய்ய முடிவெடுத்திருந்தனர் ஐபிஎல் நிர்வாகிகள். ஆனால் தற்போது அமலா பாலை ஒப்பந்தம் செய்ய பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள். "மைனா" பட நாயகியான இவர் தற்போது தமிழிலும் தெலுங்கிலும் முன்னணி நாயகியாக வலம் வரத் தொடங்கியுள்ளதால் த்ரிஷாவை விட அமலா பாலே பொருத்தமான விளம்பரத் தூதுவராக இருப்பார் என்பதால் தான் இந்த முடிவை எடுத்திருப்பதாகக் கூறியுள்ளனர் நிர்வாகிகள்.

---

# கைக்கடிகாரத்தில் கம்ப்யூட்டர்

கைகளிலேயே உலகத்தைக் காண்பிக்கும் விதமாக புதிய கைக்கடிகாரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 'ஐ ஆம்' என்ற இந்தப் புதிய ரக கைக்கடிகாரம் சிறிய கம்ப்யூட்டரைப் போன்று செயற்படுகிறது. அதில் எஸ்.எம்.எஸ். அனுப்பலாம், தொலைபேசி அழைப்புகள் செய்யலாம், இ-மெயில், ∴பேஸ்புக், ட்விட்டர் போன்ற சமூக வலைத்தளங்களில் மேயலாம் எனச் சொல்லிக்கொண்டே போகலாம். நமக்கு இ-மெயில், எஸ்.எம்.எஸ்.கள் வந்தால் அது உடனே கடிகாரத்தின் திரையில் தெரியும் வசதியும் உள்ளது.



தொலைபேசி அழைப்புகளுக்கென்று இதில் ஸ்பீக்கர்கள் பொருத்தப்பட்டுள்ளன. ப்ளூ டூத் கருவியின் மூலம் தொலைபேசி அழைப்புகளையும் மேற்கொள்ள முடியும். இதன் விலை சுமார் ரூ. 45 ஆயிரம். இளைஞர்களைக் கவரும் வண்ணம் பல்வேறு கண்கவர் வண்ணங்களில் இக்கடிகாரங்கள் உலா வருகின்றன.

எல்லாம் சரி, இதில் நேரம் பார்க்கலாமா? என்று நீங்கள் கேட்பது புரிகிறது. கண்டிப்பாக, நேரமும் பார்க்கலாம்.



# முல்லைப் பெரியாறு விவகாரம் தி.மு.க.இன்று உண்ணாவிரதம்


(சென்னை)

பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்படும் வரையில் முல்லை பெரியாறு அணையின் பாதுகாப்பை, மத்திய பாதுகாப்புப் படையினரின் பொறுப்பில் விட வேண்டும் என, தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

இது குறித்து தி.மு.க. தொண்டர்களுக்கு கருணாநிதி எழுதிய கடிதத்தில், இன்று காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை ஒரு நாள் உண்ணாவிரதம் இருப்பதென்றும், அதற்கடுத்து முல்லைப பெரியாறு அணையால் பாசன வசதி பெறும் தேனி, மதுரை, சிவகங்கை, திண்டுக்கல், ராமநாதபுரம் மாவட்டங்களில் 14ஆம் திகதி மாலை 3 மணி முதல் 5 மணி வரை மனிதச்சங்கிலி அணிவகுப்பு நடத்த, தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சென்னையில் காலை 8 மணி முதலே உண்ணாவிரதத்தில் அமர்ந்திருக்க எனக்கு விருப்பம் தான். ஆனால் கட்சியின் தொண்டர்கள் எனது வயது கருதி முழு நாளும் உண்ணாவிரதம் இருப்பது உடல் நலத்திற்கு நல்லதல்ல என்று என்னைக் கேட்காமலேயே அவர்களாகவே முடிவு செய்திருக்கின்றனர். என் உடல் உண்ணாவிரதத்திற்கு ஒத்துழைப்பு தருகிறதோ, இல்லையோ என் உள்ளம் எல்லாம் உண்ணாவிரதத்திலே தான் ஊன்றி நிலைத்திருக்கும். கேரளாவைச் சேர்ந்த பலர், தமிழகத்தில் பல முக்கிய பொறுப்புகளில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். தலைமைச் செயலகத்திலேயே பலர் உயர்நிலை அதிகாரிகளாக இருக்கின்றனர். ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளைப் போல பாசப் பிணைப்போடு பழகிக் கொண்டிருக்கும் இரு மாநிலததவரிடையே பேத உணர்வு வந்துவிடக கூடாதல்லவா? முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்பை, இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்படும் வரையில் மத்திய பாதுகாப்புப் படையின் பொறுப்பில்விட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை தற்போது முல்லைப்பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக கேரள அரசின் நிலையை எதிர்த்து தி.மு.க. உயர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளது. கேரள அரசு சட்டத்தை மீறும் வகையில் சட்டசபையில் தர்மானம் நிறைவேற்றியுள்ளது. பெரியாறு அணையில் 142 அடிவரை தண்ணீர்தேக்க உயர்நீதிமன்றம் அனுமதி கொடுத்திருந்தது. ஆனால் கேரள அரசு 136 அடிவரை நீரை தேக்கலாம் என சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றியது. தற்போது சட்டத்தை மீறும் வகையில் 120 அடிவரை நீரை தேக்க வேண்டும் எனத் தீர்மானம் இயற்றியுள்ளது. எனவே உயர்நீதிமன்றில் கேரள அரசு தாக்கல் செய்த மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும். பெரியாறு அணையில் 142 அடி வரை நீர்தேக்க கேரளாவுக்கு உத்தரவிட வேண்டும் என தி.மு.க. தனது மனுவில் கூறியுள்ளது.

## பாரதியாருக்கு பிறந்த நாள் விழா



(தூத்துக்குடி)

தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் பாரதி பிறந்தநாள் விழா நேற்று முன்தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாணவ, மாணவியர் பாரதி வேடமணிந்து ஊர்வலம் வந்தனர். முண்டாசுக் கவிஞன், மீசைக் கவிஞன் என்று பல்வேறு பெயர்களில் பெருமைபட அழைக்கப்படும், சுதந்திர போராட்ட வீரர் சுப்பிரமணிய பாரதியாரின் 130 ஆவது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. இதையொட்டி அவர் பிறந்த ஊரான, தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில், அவரது இல்லத்திலுள்ள சிலைக்கு மாவட்ட நிர்வாகம் சார்பில், டி.ஆர்.ஓ. அமிர்தஜோதி, மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்.

மேலும், தமிழ் எழுத்தாளர்கள் சங்கம் சார்பில் ஊர்வலம் நடந்தது. தொடர்ந்து, பாரதி மணிமண்டபத்தில் கவியரங்கம் நடத்தி பாரதிக்கு புகழஞ்சலி செலுத்தினர். இதுபோல, பாரதி வேடமணிந்த பள்ளி மாணவ, மாணவியர் பாரதி இல்லத்திலிருந்து மணிமண்டபத்திற்கு ஊர்வலமாக வந்தனர். மாலையில் பாரதி பிறந்தநாள் விழா அரசு விழாவாக கொண்டாடப்பட்டது.

## காஷ்மீர் அமைச்சர் மீது தீவிரவாதிகள் தாக்குதல்

### முதல்வர் ஒமர் கண்டனம்

(புதுடில்லி)

இந்திய மாநிலமான ஜம்மு-காஷ்மீரில் நடந்த தீவிரவாதிகளின் தாக்குதலில் காஷ்மீர் அமைச்சர் அலி முகம்மது சாகர் உயிர்தப்பினார்.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் பல்வேறு நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு அமைச்சர் வீடு திரும்பி கொண்டிருந்த பொழுது, அங்கு பதுங்கியிருந்த தீவிரவாதிகள் திடீரென அமைச்சர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதில் அமைச்சர் உயிர் தப்பித்தார். அப்போது நடந்த துப்பாக்கிச்சண்டையில் ஒரு பாதுகாப்புப்படை வீரர் பலியானர். மூன்று பொலிஸார் காயமடைந்தனர். ஆனால் கண் இமைக்கும் நேரத்தில் தீவிரவாதிகள் அங்கிருந்து தப்பியோடிவிட்டனர்.

இச்சம்பவத்திற்கு காஷ்மீர் முதல்வர் ஒமர்அப்துல்லா கண்டனம் தெரிவித்துள்ளார். மேலும் விரைந்து விசாரணை நடத்தி குற்றவாளிகளைக் கைது செய்யுமாறு பொலிஸ் அதிகாரிகளுக்கு உள்துறை அமைச்சர் நஸீர் உத்தரவிட்டுள்ளார்.

## இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் 15 இல் ரஷ்யாவிற்கு விஜயம்

(டில்லி)

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் எதிர்வரும் 15ஆம் திகதி ரஷ்யா தலைநகர் மொஸ்கோவுக்குப் பயணமாகிறார். அவருடன் முக்கிய அதிகாரிகள் அடங்கிய தூதுக்குழுவும் செல்கிறது. 16ஆம் திகதி இரு நாடுகளுக்கும் இடையில் மாநாடு நடக்கவிருக்கின்றது. இதில் இந்தியக் குழுவுக்கு பிரதமர் மன்மோகன் சிங்கும், ரஷ்யக் குழுவுக்கு ரஷ்ய ஜனாதிபதி டிமிட்ரி மெட்வடேவ்வும் தலைமை தாங்குகிறார்கள்.

இம் மாநாட்டில் அணுசக்தி துறை, இராணுவப் பாதுகாப்பு, வர்த்தக உறவு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயற்படுவது குறித்து விவாதித்து முடிவு எடுககப்படுகிறது. இரு நாடுகளின் உறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக சுமார் 10 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன.

ரஷ்ய நாட்டின் ஒத்துழைப்புடன் கூடங்குளத்தில் 2 அணு மின் நிலையங்கள் கட்டப்பட்டு, உற்பத்தியைத் தொடங்கும் நிலையில் உள்ளன. அங்கு மேலும் 3 மற்றும் 4ஆவது அணு உலைகள் அமைக்க ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளது. இதை அமுல்படுத்துவது குறித்தும் இரு நாட்டு குழுவினரும் ஆலோசனை நடத்துகிறார்கள்.

2015ஆம் ஆண்டு வரை ரஷ்ய 1 இலட்சம் கோடிக்கும் அதிகமாக இந்தியாவுடன் வர்த்தகம் செய்ய முடிவு செய்து உள்ளது. இதன் மூலம் இருநாடுகள் இடையே பல்வேறு துறைகளில் மட்டுமல்லாது வர்த்தக உறவு மென்மேலும் வளர நல்ல சூழல் ஏற்படும் என்று இந்தியாவுக்கான ரஷ்யத் தூதர் அலெக்சாண்டர் கடாகின் தெரிவித்தார்.




## அறுவைச் சிகிச்சை இன்றி புற்றுநோயை குணப்படுத்தலாம்




### பல்கலை மாணவி கண்டுபிடிப்பு

(பெங்களூர்)

மார்பக புற்றுநோயை அறுவை சிகிச்சை இல்லாமல் குணப்படுத்தும் வழிமுறையை கர்நாடகாவைச் சேர்ந்த மாணவி கண்டறிந்து சாதனைபடைத்துள்ளார். இவரது பெற்றோர் அப்பள வியாபாரம் செய்துபடிக்க வைத்தனர்.

நாகரத்னா ஹெக்டே (வயது - 26) கர்நாடகா பல்கலைக்கழகத்தில் எம்.எஸ்.சி இரசாயனவியல் பட்டம் முடித்தபின் பெங்களூரில் உள்ள தைராய்டு மருந்து ஆராய்ச்சி மையத்தில், பேராசிரியர் முகேஷ் என்பவருக்கு உதவியாகப் பணியாற்றினார்.


அப்போது லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் இரசாயனவியல் துறை பேராசிரியர் சங்கர் பாலசுப்ரமணியன், நாகரத்னாவின் ஆராய்ச்சி ஆர்வம் குறித்து கேள்விப்பட்டார். தனது மேற்பார்வையில் மார்பகப் புற்றுநோய் மருந்து ஆராய்ச்சியில் ஈடுபடும்படி நாகரத்னாவிடம் கூறினார். இதனைத் தொடர்ந்து 'தியாஸ்ட்ரெப்டன்' என்ற இயற்கை மூலக்கூறு மூலம் மார்பகப் புற்று நோய் பரவுவதைத் தடுக்க முடியும் எனக் கண்டுபிடித்து ஆய்வறிக்கை சமர்பித்தார். 'நேச்சர் கெமிஸ்ட்ரி' என்ற இதழில் வெளியான இந்த ஆய்வறிக்கை ஆராய்ச்சியாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## அணு உலைகளின் பாதுகாப்பு ஏ.இ.ஆர்.பி. புதிய திட்டம்

(சென்னை)

இந்தியாவில் உள்ள அனைத்து அணு உலைகளுக்கான புதுப்பிக்கத்தக்க உரிம முறையைக் கொண்டு வருவது, கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகளை அமுல்படுத்துவது, பல்வேறு சேவைகளுக்கான கட்டணங்களை நிர்ணயிப்பது என, இந்திய அணுசக்தி ஒழுங்கு முறை ஆணையம் (ஏ.இ.ஆர்.பி.,) முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து ஏ.இ.ஆர்.பி. தலைவர் எஸ்.எஸ்.பஜாஜ் கூறியதாவது: இந்தியாவில் உள்ள 20 அணு உலைகளும், இனி ஐந்தாண்டுக்கு ஒரு முறை தொடர்ந்து இயங்குவதற்கான உரிமங்களைப் பெற வேண்டும். புக்குஷிமா விபத்திற்கு பிறகு, கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றை நடைமுறைப்படுத்துவது குறித்து, இந்திய அணுசக்தி கார்ப்பரேஷன் விரைவில், ஒரு முன்வரைவுத் திட்டத்தை அளிககும்.



எந்த ஒரு அணு உலைக்கும், ஆயுள் காலம் முழுவதும் இயங்குவதற்கான உரிமங்களை, ஏ.இ.ஆர். பி. வழங்காது. ஐந்தாண்டுக்கு ஒரு முறை, அணு உலைகள் பற்றிய அறிக்கைகள் வழங்கப்படும். அதன் அடிப்படையில் இந்த உரிமங்கள் வழங்கப்படும்.

மேலும் தாராபூரில் குறுகிய கால மற்றும் நீண்ட கால அடிப்படையிலான பாதுகாப்பு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படும்.

இதில் சில கட்டுமானங்கள் கடட வேண்டியிருப்பதால், இவற்றை நடைமுறைப்படுத்த சிறிது காலமாகும். எனினும் இன்னும் 18 மாதங்களில், இந்தியாவின் அனைத்து அணு உலைகளிலும் குறுகிய மற்றும் நீண்ட கால பாதுகாப்பு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## 8 அடி நீள ராஜ நாகம் கேரளாவில் பிடிபட்டது

(பாலக்காடு)



கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டம் மன்னார்காடு அருகே கண்ணடிகோர்ட் கிராமத்தில் ஆட்டுகிடை அமைக்கப்பட்டு ஆடுகளை அடைத்து வைத்திருந்தனர். அங்கு எட்டரை அடி நீள ராஜநாகம் புகுந்தது. சத்தம் கேட்டு வந்த பொதுமக்கள் அங்கு ராஜநாகம் புகுந்திருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். பாம்பு பிடிக்கும் திறமை பெற்ற சம்சுதீன் மற்றும் அவரது மகன் முஸ்தபா ஆகியோர் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் பாம்பைப் பிடிக்க முயன்றபோது அந்த ராஜநாகம் ஆத்திரத்துடன் சீறியது. ஆனாலும் சம்சுதீன் லாவகமாக அந்த ராஜநாகத்தை பிடித்து வனத்துறையினரிடம் ஒப்படைத்தார்.

உலகச் செய்திகள்

# ஜேர்மனியில் நவீன நாஜிக் கட்சிக்கு எதிர்ப்பு

NPD Die Nationalen

ஜேர்மனியின் பதினாறு மாநிலத்தின் உள்துறை அமைச்சர்களும் கடந்த வெள்ளிக்கிழமை ஒன்று கூடி தீவிர வலதுசாரிக் கட்சியான என்.பி.டி என்று அழைக்கப்படும் தேசிய குடியரசுக் கட்சியைத் தடை செய்யும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தனர். ஜேர்மனியின் வீஸ்படென் நகரத்தில் நடந்த அமைச்சர்களின் இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து ஹெசெ மாநிலத்தின் உள்துறை அமைச்சரான போரிஸ் ரெய்ன் என்.பி.டியை, நாட்டின் சுதந்திரமான குடியரசு முறையைச் சிதைக்கவும், அழிக்கவும் ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்ட நடத்தைகளையும், குறிக்கோள்களையும் கொண்ட கட்சி என்று விமர்சித்தார்.

நவீன நாஜிக்கட்சியாகத் திகழும் என்.பி.டியின் மீது சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்கத் தற்போது மாநில மற்றும் கூட்டமைப்பின் பணிக்குழுக்கள் தீவிரமாகச் செயற்பட்டு வருவதாக ஜேர்மனியக் கூட்டமைப்பின் உள்துறை அமைச்சர் ஹேன்ஸ் பீட்டர் ஃபிரெட்ரிக் தெரிவித்தார்.

# லிபிய தலைநகர் திரிபோலியில் கிளர்ச்சிப் படைக்கு இடையில் மோதல்

லிபிய தலைநகர் திரிபோலியின் சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் கிளர்ச்சிப் படை வீரர்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது. இதில் இருவர் காயமடைந்துள்ளனர். திரிபோலி சர்வதேச விமான நிலையத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் கிளர்ச்சிப் படையின் சின்தான் பிரிவுக்கும், திரிபோலியின் கிளர்ச்சிப் படை வீரர்களுக்கும் இடையிலேயே இந்த மோதல் ஏற்பட்டுள்ளது. இதில் சின்தான் கிளர்ச்சியாளர்களிடம் இருந்து விமான நிலையத்தைக் கைப்பற்ற திரிபோலி கிளர்ச்சியாளர்கள் முற்பட்டபோதே இந்த மோதல் மூண்டதாக, விமான நிலையத்தின் நிர்வாகப் பிரிவில் பணிபுரியும் கமுகா என்பவர் செய்தி நிறுவனம் ஒன்றிற்கு தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தை தொடர்ந்து முஅம்மர் கடாபியை ஆட்சியில் இருந்து கவிழ்த்த லிபிய இடைக்கால அரசின் ஸ்திரத்தன்மை குறித்து கேள்வி எழுந்துள்ளது. ஏற்கனவே லிபிய தலைநகர் திரிபோலியில் இருந்து வெளிப்பகுதி கிளர்ச்சியாளர்கள் வெளியேறவும், குடியிருப்பாளர்களுக்கு ஆயுதங்களை கையளிக்கவும் இடைக்கால அரசு கெடுவிதித்த நிலையிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் மோதலில் ஈடுபட்ட சின்தான் கிளர்ச்சிப் படையினரின் வசமே லிபிய முன்னாள் தலைவர் முஅம்மர் கடாபியின் மகன் சைப் அல் இஸ்லாம் சிறை வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத குடியேற்றக்காரர்களால் கடுப்பான அமைச்சர்



கனடாவில் சட்டத்திற்குப் புறம்பாக சுமார் 6500 பேர் நூறு நாடுகளில் இருந்து வந்து தங்கியிருப்பதாக கனடா அரசு தெரிவித்துள்ளது. இந்த ஏமாற்று வேலையை கனடா மக்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் என கனடாவின் குடியகலவு அமைச்சர் ஜேசன் கென்னி தெரிவித்துள்ளார்.

மேலும் அவர்தெரிவிக்கையில், கனடாவின் குடியுரிமை விற்பனைக்கு இல்லை. மோசடியாகக் குடியுரிமை பெற்றவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்று எச்சரித்த கென்னி 2100 பேர் சட்டத்திற்குப் புறம்பாகவும், 4400 பேர் மோசடியாகவும் குடியுரிமை பெற்றுள்ளனர் என்றார். மேலும் கனடாவில் ஒருவர் குடியுரிமை பெற இரண்டாண்டுகளாவது கனடாவில் தங்கியிருக்க வேண்டும் என்றார்.

அவ்வாறு தங்காதவர்கள் குடியுரிமை பெற்று இருப்பதை காவற்துறையும் குடியகல்வு அமைச்சின் அதிகாரிகளும் தொடர்ந்து கண்காணித்து அவர்களின் குடியுரிமையைப் பறிக்கும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்றார். கடந்த 1867 ஆம் ஆண்டு முதல் கனடாவில் குடியுரிமை பறிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 66 தான் என்பது குறிப்பிடத்தக்கது.


# இரு பிரெஞ்சு நபர்கள் கடத்தல்

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இருவரை AQIM என்ற தீவிரவாத இயக்கத்தினர் கடந்த நவம்பர் மாதம் 24ஆம் திகதி நைஜர் நாட்டின் எல்லையிலிருக்கும் ஹோம்பேரி நகரின் ஹோட்டலிலிருந்து துப்பாக்கி முனையில் தீவிரவாதிகள் கடத்திச் சென்று விட்டனர். இவர்களது படத்தை கடந்த சனிக்கிழமை இந்த அமைப்பினர் வெளியிட்டனர். இதில் செர்ஜி லாசரெவிக் மற்றும் பிலிப்பி வெர்டோன் என்ற இந்த இரண்டு பிரெஞ்சுக்காரர்களோடு முகமூடியணிந்து ஆயுத மேந்திய தீவிரவாதிகள் மூவர் காட்சியளிக்கின்றனர்.

இவர்கள் இருவரும் பிரான்சின் துப்பறியும் நிறுவனத்தில் பணிபுரிந்தவர்கள் ஆவர். பிரான்ஸ் நாடு சாகேல் நாடுகளில் வாழும் முஸ்லிம்கள் மீது தொடர்ந்து அடக்குமுறை செலுத்துவதால் ஆட்கடத்தல் நடந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

# அமெரிக்காவிற்கு வெளியே சி.ஐ.ஏ.இன் இரகசிய சிறைகள்

ருமேனியா நாட்டு அரசு அலுவலகம் ஒன்றின் கீழ்ப்பகுதியில் சி.ஐ.ஏ. ரகசியமான சிலரை அடைத்து வைத்திருந்த ரகசியத்தை ஒரு ஜேர்மன் பத்திரிகை வெளியிட்டு இக்கின்றது. செப்.-11 தாக்குதலின் மாஸ்டர்-மைன்ட் என்று நம்பப்படும் காலிட் ஷேக் மொஹாமெட்டும் சில நாட்கள் இங்கே சி.ஐ,ஏ .-யால் அடைத்து வைக்கப்பட்டிருந்தார் என அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.



இந்தத் தகவலை ருமேனிய அரசு அவசர அவசரமாக மறுப்புத் தெரிவித்துள்ளது. ஆனால், இந்த ரகசியத்தை வெளியே கொண்டுவந்துள்ள ஜேர்மன் பத்திரிகை, தாம் வெளியிட்டுள்ள தகவல்களுக்கு தம்மிடம் போதிய ஆதாரங்கள் உள்ளன என்று கூறியுள்ளது. குறிப்பிட்ட அரசு அலுவலக கட்டடம் ருமேனியா தலைநகர் புச்சாரெஸ்டின் தென்மேற்குப் பகுதியில், மக்கள் குடியிருப்புகள் உள்ள இடம் ஒன்றில் அமைந்துள்ளது. இந்தக் கட்டடத்தின் உட்புறத்தில் எடுக்கப்பட்ட படங்களைப் பார்த்து, அது ருமேனியாவில் உள்ள சி.ஐ.ஏ.-யின் இரகசிய சிறைதான் என சி.ஐ.ஏ. முன்னாள் அதிகாரிகள் சிலர் அடையாளம் கண்டு உறுதிப்படுத்தியதாக அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

சி.ஐ.ஏ.-யில் இந்த இரகசிய சிறைக்கு வைக்கப்பட்டுள்ள சங்கேதப் பெயர் 'பிரைட் லைட்' என்று தெரியவருகின்றது. 2003-2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் சி.ஐ.ஏ. தாம் ரகசியமாக விசாரிக்க வேண்டிய நபர்களை இங்கே அடைத்து வைத்து விசாரித்துள்ளனர். கைதிகளை அமெரிக்காவில் வைத்து விசாரிக்கும்போது, அமெரிக்க சட்டங்களுக்கு உட்பட்டுத்தான் விசாரிக்க முடியும். அந்த விசாரணைக் கைதியை ஒரு நீதிபதி பார்க்க விரும்பினால், சட்டப்படி அனுமதி வழங்கியே தீர வேண்டும் என்பதால், கைதியாக இருப்பவர் யார் என்பதில் ரகசியம் காக்க முடியாது. அதனால் தான், இப்படியான வெளிநாடுகளில் அவர்களை அடைத்து வைத்து விசாரிப்பது சி.ஐ.ஏ.-யின் வழக்கம். ருமேனியாவில் சி.ஐ.ஏ.-யின் ரகசிய நடவடிக்கைகள், அங்குள்ள அரசின் அனுமதியுடன் நடைபெறுகின்றன என்ற சந்தேகம் நீண்ட காலமாக எழுப்பப்பட்டுக்கொண்டு இருந்தது. ஆனால், அதற்கு ஆதாரம் ஏதும் கிடைத்திருக்கவில்லை. இப்போது, முழுமையான ஆதாரங்கள் உள்ளதாக ஜேர்மன் பத்திரிகை தெரிவித்துள்ளது.

# பதிவிறக்கப் பெட்டகம்

அறிவுஜீவி என்பவன் பின்னொதுக்கப்பட்டவர்கள், அதிகார மையங்களில் பிரதிநிதித்துவம் மறுக்கப்பட்டவர்கள் ஆகியோரின் சார்பானவனாகவே இருப்பான் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. அவன் றொபின் ஹூட் ஆகவேண்டுமா என்று சிலர் இடக்காகக் கேட்கலாம். அவ்வளவு எளிதான ஒன்றல்ல இது. வெறும கற்பனைக் கனவாக ஒதுக்கிவிடக் கூடியதுமல்ல. அறிவுஜீவியாக இருப்பவன் அடிப்படையில் சமாதானவாதியோ சமரசவாதியோ அல்ல. அவனுடைய உயிரோட்டமான சக்தியே விமர்சன உணர்வுதான். அந்த விமர்சன உணர்வில் எளிமையான சூத்திரங்களை அவன் புறக்கணிக்கிறான். வலுவான ஆட்சியாளர்களும் மரபுவாதிகளும் சொல்லுகிற காரியங்களுக்கும் செய்கிற செயல்களுக்கும் 'ஆமாம்' போடாமலிருக்கிறான். அவனுடைய அறுப்பு அவனுக்குள் மட்டும் ஒடுங்கிவிடுகிற வலுவற்ற ஒன்றாக இருக்கக் கூடாது. தன்னுடைய நிலைப்பாட்டைப் பொதுச்சமூகத்தின் முன் தயக்கமில்லாமல் சொல்லக் கூடியவனாக அவன் இருக்க வேண்டும்...

தம்முடைய கலாசாரத்தின் சிறப்புகளையும், தம்முடைய வரலாற்றின் வெற்றிகளையும் பேசி, ஆரவாரம் செய்வது அறிவுஜீவிகளின் வேலையாக இருக்க முடியாது. அறிவுஜீவிகள் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்திக் கொள்ளும் பொதுமக்கள் பரப்பு என்பது இப்போது மிகவும் சிக்கல் நிறைந்ததாக, தொந்தரவு தரும் கூறுகள் கொண்டதாக உள்ளது. அந்தப் பரப்பில் ஒருவர் தீவிரமாகக் குறுக்கீடு செய்வதென்பதன் பொருள் நீதிக்கும் சமத்துவத்துக்குமான விட்டுக்கொடுக்காததொரு போராட்டத்தை அவர் நடத்துவதிலேயே தங்கியுள்ளது. **– எட்வேர்ட் ஸெய்த்**

அறிவுஜீவிகள் யாரும் தமிழில் தோன்றவே இல்லை. தத்துவம் சார்ந்து பேசக்கூடியவர்களை அறிவுஜீவிகள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். அறிவுஜீவி கடினமான உழைப்பைச் செலுத்திக்கொண்டு, அதற்காக எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் இருக்கக்கூடியவன். அவன் தன்னை முன்வைத்து சுயபெருக்கம் செய்துகொள்வதில்லை. அப்படிப்பட்டவர்கள் தமிழில் நவீனப் போக்கில் எவருமில்லை. **– எஸ்.ராமகிருஷ்ணன்**

ஒவ்வொரு வாக்கியத்திற்கிடையிலும் புரிகிறதா புரிகிறதா என்று கேட்பார்கள். நீங்கள் தவறியும் புரிகிறது என்று சொல்லிவிடக் கூடாது. மிகவும் வருத்தப்படுவார்கள்.

**– புத்திஜீவிகள் பற்றி இ.பா.**

இன்று மனித உரிமை குறித்து, நாட்டார் கலைகள் அழிவது குறித்து, பழங்குடியினர் தங்கள் இருப்பிடத்தை விட்டு துரத்தப்படுவது குறித்து, விவசாயிகளின் தற்கொலைகள் குறித்து, உலகமயமாதலின் பிரச்சினைகள் குறித்து, அணு உலைகள் குறித்து, மரபணு மாற்று விதைகளை குறித்து என்று எவை குறித்தும் நாம் மேடையில் பேசலாம். ஆனால் அவற்றை குறித்து பேசும்போதே குறியீட்டுத்தளத்தில் நவீன முதலாளிகளுக்கும் அரசுக்கும் ஒரு செய்தி சொல்கிறோம். நாங்கள் இந்த அமைப்பின் சலுகைகளையும் சௌகரியங்களையும் மிகவும் விரும்புகிறோம். உண்மையில் நாங்கள் விரும்புவது மாற்றம் அல்ல மாறாக Status Quo தான் என்று. உடனே கார்ப்ரேட்கள் மகிழ்ச்சி கொள்கின்றனர். பிரச்சினை எதுவும் இல்லையென்றானபின் நமக்கு உதவிகள் செய்யக்கூட முன்வருகிறார்கள். இப்படித்தான் நாட்டார் கலைகள் குறித்தும் நாட்டார் பண்பாடு குறித்தும் ஆராய கார்ப்ரேட் உதவி செய்யும் அபத்தத்தை நம்மால் பார்க்க முடிகிறது. ஆக, இந்த அமைப்புக்குள் இருந்து கொண்டே எழுப்பப்படும் குரல்கள் மையத்தில் கலக்கின்றன. அப்படியல்லாமல் அமைப்புக்கு வெளியில் இருக்கும் குரல்கள் சேர்ந்து ஒலிக்கும்போது அது மிகப்பெரிய சலனத்தையும் அச்சத்தையும் மையத்தில் ஏற்படுத்துகிறது. உடனே அந்தக் குரல் ஒடுக்கப்படுகிறது. ஆனால் அது தான் உண்மையான மாற்றுக் குரல். **– சர்வோத்தமன்**

தமிழர்களிடம் அவ்வளவாக வாசிப்புப் பழக்கம் இல்லை. இதை நாம் ஒத்துக் கொண்டே ஆக வேண்டும். ஆனால் அதே சமயம், வாசிக்கும் பழக்கம் உள்ளவர்களை எடுத்துக் கொண்டால் இங்கே உள்ளவர்களைப் போல் ஒரு வாசகனை நீங்கள் உலகம் பூராவும் பார்க்க முடியாது. உதாரணமாக, இதாலோ கால்வினோ என்ற இத்தாலிய எழுத்தாளரை இத்தாலியில் தெரிந்தவர்களை விட தமிழ்நாட்டில் தெரிந்தவர்கள் அதிகம். அதேபோல் மார்க்கெஸ் அதேபோல் போர்ஹெஸ். இங்கே உள்ள வாசகர்கள் உலக இலக்கியத்தையே விரல்நுனியில் வைத்திருக்கிறார்கள். வாசகர்களே இப்படி என்றால், எழுத்தாளர்கள் எப்படி இருப்பார்கள்? தமிழ் எழுத்தாளன் அளவுக்குப் பரந்துபட்ட வாசிப்பு அனுபவம் உள்ள எழுத்தாளர்களை உலகில் எந்த மூலையிலும் பார்க்க முடியவில்லை. சர்வதேச இலக்கியக் கருத்தரங்குகளில் நான் குறிப்பிடும் எழுத்தாளர்களைப் பார்த்து மூக்கில் விரல் வைக்கிறார்கள். அப்போது நான் சொல்வேன் "எங்கள் ஊரில் நான் மிகக் குறைவாகப் படித்தவன். எஸ். ராமகிருஷ்ணன் என்று ஒருவர் இருக்கிறார். அவரைப் பார்த்தால் மயக்கம் போட்டு விழுந்து விடுவீர்கள்" **– சாரு நிவேதிதா**

# நாடு கடந்த தமிழீழ அரசு

## Transnational Government of Tamil eelam

# கற்பனையும் யதார்த்தமும்

சிலரது வாழ்க்கை அவர்கள் விரும்பும் வகையில் அமையாமல் இருக்கலாம். அவர்கள் மனதில் விரும்புவது ஒன்றாக இருக்கும். ஆனால் யதார்த்த வாழ்க்கை முற்றிலும் வேறு வகையில் அமைந்திருக்கும். அத்தகையவர்களுக்கு ஒருவகையில் இரட்டை வாழ்க்கை வாழ்வது போன்ற உணர்வு ஏற்படும். அந்த மாதிரியானவர்கள் தாங்கள் உண்மையில் விரும்பும் வழ்க்கையை உருவாக்கிக் கொள்ளும் வாய்ப்பு தற்போது இணையத்தளத்தின் வாயிலாக ஏற்பட்டுள்ளது. இது மற்றொரு நிஜமான வாழ்க்கை என்று கருதவேண்டாம். இது இணையத்தளத்தின் மூலம் உருவாக்கிக்கொள்ளும் ஒரு தனி உலகம்.

இங்கு ஒவ்வொருவரும் தாங்கள் விரும்பும் வாழ்க்கையை விரும்பும் சூழ்நிலையில் ஏற்படுத்திக்கொள்ளலாம். விரும்பும் பாத்திரங்களைத் தேர்ந்தெடுக்கலாம். அதாவது ஆசிரியராக, இசை அமைப்பாளராக, அரசியல்வாதியாக, உணவு விடுதியின் சொந்தக்காரராக என்று எதை வேண்டுமென்றாலும் தேர்நதெடுத்துக் கொள்ளலாம். இவ்வாறு இணையத்தளத்தில் மாடமாளிகைகளைக் கட்டி குடியேற்றியவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 15 இலட்சததைத் தாண்டிவிட்டது.

இத்தகைய மாற்றங்கள் நம்மைப் பற்றி என்ன கூறுகின்றன? அதீத கற்பனையில் உருவாக்கும் நிகழ்வையும், நடைமுறையில் வாழும் வாழ்க்கையையும் நம் மனதால் வித்தியாசப்படுத்திப் பார்க்கத் தெரியவில்லை என்றே கூற வேண்டும். நாம் உண்மையில் எதை விரும்புகின்றோம், எதை விரும்பவில்லை என்பதை சரியாக வித்தியாசப்படுத்தி பார்க்கத் தெரியாததால் தான் நம்மால் சாதனை நிகழ்த்த முடிவதில்லை.

வால்டர் மிட்டி என்ற கதாபாத்திரத்தை வைத்து ஜேம்ஸ் தர்பார் என்ற எழுத்தாளர் -வால்டர் மிட்டியின் இரகசிய வாழ்க்கை என்ற சிறுகதையை எழுதி உள்ளார். இந்தச் சிறுகதையில் வரும் வால்டர் மிட்டி தன்னை போர்க்காலத்தில் செயற்படும் விமானிபோல கற்பனை உலகத்தில் வாழத் தொடங்குகிறார். இந்தக் கற்பனைச் செயற்பாடு மிட்டி தனது மனைவியுடன் காரில் செல்லும் போது அவரது மனதில் தோன்றும் நிகழ்வாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. அவர் காரை விமானம் என்று கருதி வேகமாக ஓட்டுகிறார். வேகத்தைக் குறைக்கும்படி மனைவி உரத்த குரலில் கத்த மிட்டி தான் சில நிமிடங்கள் வாழ்ந்த கற்பனை உலகத்திலிருந்து யதார்த்த உலகத்துக்குத் திரும்புகிறார். கார் நின்றவுடன் வால்டர் மிட்டியின் மனைவி இறங்கி அழகு நிலையதத்துக்குச் செல்கிறார். அதற்குமுன் கையுறை அணிந்து கொண்டு கார் ஓடடும்படி கணவரிடம் கூறிவிட்டுச் செல்கிறார்.

உடனே வால்டர் மிட்டி தன்னை அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவ நிபுணராகக் கற்பனை செய்ய ஆரம்பிக்கிறார். சில நிமிடங்கள் கழித்துத் தான் தனது மனைவி வாங்கி வரச் சொன்ன பொருட்கள் பற்றி நினைவு அவருக்கு வருகிறது. அப்போது ஒரு பையன் நீதிமன்றத்தில் நடக்கும் ஒரு வழக்குப் பற்றி கூறிக்கொண்டு செல்வது மிட்டியின் காதில் விழுகிறது. உடனே நீதிமன்றத்தில் நுழைந்து தான் துப்பாககியால் சுட்டது போல கற்பனை செய்கிறார். வால்டர் மிட்டியின் மனைவி மீண்டும் அவரை யதார்த்த உலகத்துக்குக் கொண்டு வரும்போது ஹீரோவைப போல துப்பாக்கியுடன் நடந்து வரும் வீரர்களை எதிர்கொள்வதுபோல கதை முடிகிறது. ஒரு மணி நேரத்துக்குள் பல கதாபாத்திரங்களின் மூலம் வால்டர மிட்டி தன்னை வெளிப்படுத்த முயல்வ தாகக் கதை அமைக்கப்பட்டுள்ளது.

இன்று இணையத்தளத்தின் மூலம் தாங்கள் விரும்பும் அனுபவத்தைப் பெற முயல்பவர்களுக்கு தங்களது உண்மையான யதார்த்த உலகமும் புரிகிறது. அதேசமயம் வாய்ப்புக்கிடைக்கும் போது இணையத்தளத்தின் துணையுடன் தாங்கள் விரும்பும் வாழ்க்கையை வாழ்வது போல கற்பனை செய்துகொள்கிறார்கள்.

**- ப. சுரேஷ்குமார்**

நிமிடத்திற்கு ஒருமுறை புதிய புதிய வேடங்களைப் போட்டுக்கொள்வது பெரிதல்ல. ஆனால் தனது உண்மை நிலை என்ன, போட்டிருக்கும் வேடம் என்ன என்று சரியாகப் புரிந்து கொண்டால்தான் வாழ்க்கையை ஒழுங்காக வாழ முடியும். சாதாரண நிலையில் உள்ள ஒரு நாடக நடிகர், ராஜா வேடத்தில் நடித்துவிட்டு வேடத்தைக் கலைததவுடன் தனது இராச்சியத்தை காணவில்லையே என்று தேடத்தொடங்குவதுதான் தவறு.

மற்றபடி கனவுகள், கற்பனைகள், புதிய புதிய கதாபாத்திரங்கள் என்று ஒவ்வொருவரும் அவரவரின் மனநிலைக்கேற்ப சில நேரங்களில் கற்பனை உலகத்தில் சஞ்சரித்துவிட்டு நடைமுறை உலகத்திற்கு திரும்புவது இயல்புதான். உறங்கும்போது கூட யாரும் பெரும்பாலும் முழுமையாக உறங்குவதில்லை. குறைந்த நேரமே ஆழ்ந்த உறக்கம் நிகழ்கிறது. மற்ற நேரங்களில் மனம் கனவுலகில்தான் மிதக்கிறது. இதற் குக் காரணம் அன்றாட வாழ்க்கையில நாம் எதிர்கொள்ளும் அனுபவங்களை முழுமையாக அனுபவிக்கத் தவறுவது தான். எந்த ஒரு நிகழ்வையும் நம்மால முழுமையாக நினைவுகூர முடிவதில்லை.

இருப்பதை விட்டுவிட்டுப் பறப்பதைப் பிடிக்க நினைக்கும் மனதை நெறிப்படுத்தப் பழக வேண்டும்.

கற்பனாசக்தி என்பது மனிதர்கள் அனைவருக்கும் இயற்கை அளித்துள்ள வரம். அதை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற நெறிமுறைகளை மனம் அறிந்திருக்க வேண்டும். பலர் தங்களால் அடைய முடியாதவற்றை மனக்கண்ணால் கற்பனை செய்து கொண்டு அடைந்ததுபோலக் கருதுவது ஒருவகையில் மனச்சுமையைக் குறைக்கும்.

ஆனால் யதார்த்த உலகத்துக்கும் கற்பனை உலகத்துக்கும் இடையே பெரிய இடைவெளி ஏற்படும் போது வாழ்க்கை முரண்படுகிறது. கற்பனையை கருவியாகக் கொண்டு யதார்த்த உலகில் எதிர்கொள்ளும் சில துயரமான அனுபவங்களில் இருந்து சற்று விலகி இருக்க முயல்வது தவறு கிடையாது. ஆனால் முழுமையாக கற்பனையிலேயே கோட்டை கட்டி அங்கே குடியேற வேண்டும் என்று தீவிரமாக நினைத்துச் செயற்பட்டால் சிக்கல் ஏற்பட்டு விடும்.

**நன்றி : இணையம்**

# தமிழர்களிற்கு சாதகமான சூழல் எப்போது?

இலங்கையைச் சுற்றியுள்ள கடற்பரப்பில் எண்ணெய் அகழ்வு ஆராய்ச்சியை மேற்கொள்ள சீன நிறுவனம் ஒன்றிற்கு அனுமதி வழங்குவது தொடர்பில் அரசாங்கம் முனைப்புக்காட்டி வருகின்றது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை காரணமாக இந்தியா கடுப்படையத் தொடங்கி உள்ளது.

சீனா இலங்கைக் கடற்பரப்பில் இந்த ஆய்வுப்பணிகளை மேற்கொள்ளுமானால் இந்தியாவின் பாதுகாப்பு கேள்விக்குறியாகும், இந்தியாவிற்கு இதனால் ஆபத்து உள்ளது என இந்திய அரசாங்கத்தை அங்குள்ள கொள்கை வகுப்பாளர்களும் இராஜதந்திரிகளும் எச்சரித்துள்ளனர்.

இலங்கை கடற்பரப்பை மூன்று பகுதிகளாக பிரித்து எண்ணெய் வள ஆயவுப் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப பட்டுள்ளது. மன்னார் கடற்பகுதியில் இத்தகைய ஆய்வுப்பணியை மேற்கொள்ளும் பொறுப்பை இந்திய நிறுவனம் ஒன்றிடம் இலங்கை ஒப்படைத்துள்ளது. ஏனைய இரண்டு பிரிவுகளில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக விலைமனு கோரப்பட்டுள்ளது. இதில் தென் பகுதிக் கடற்பரப்பில் ஆய்வுப்பணிகளை மேற்கொள்ள சீன தனியார் நிறுவனம் அல்லது சீன அரசிடம் இப்பொறுப்பை ஒப்படைப்பது பற்றி அரச உயர் மட்டம் ஆராய்ந்து வருகின்றது.

ஆனால் இவ்விவகாரம் தொடர்பில உசாரடைந்துள்ள இந்தியா சீனாவிற்கு கடற்பரப்பில் ஆய்வுப்பணிகளை மேற்கொள்வதற்கு இடம் அளிக்க வேண்டாம் என இலங்கையிடம் கூறி உள்ளது. இந்தியாவின் கோரிக்கையை இலங்கை நிராகரிக்கும் நிலையில் இல்லை. ஏனெனில், இலங்கையின் பாதுகாப்பு விவகாரத்தில் இந்தியா சகல வழிகளிலும் இலங்கைக்கு உதவியுள்ளது. எனவே இந்தியாவின் பாதுகாப்புக்கு முரணான விவகாரத்தில் இலங்கை ஒரு போதுமே ஈடுபடாது.

அத்துடன் தமிழர்களின் இனப்பிரச்சினை தீர்வு விவகாரத்திலும் இருதரபபும் கருத்துப்பரிமாற்றங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டே வருகின்றன. இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் இந்தியாவின் ஆலோசனையை விரும்பியோ விரும்பாமலோ இலங்கை தொடர்ச்சியாக பெற்றே வருகின்றது. இலங்கையைப் பொறுத்தவரை இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் மேற்குலகத்தை விட இந்தியாவை அனுசரித்துச் செல்வதையே விரும்புகின்றது.


இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் அனைத்துக்கட்சி தெரிவுக் குழு உட்பட இறுதித்தீர்வு வரை இந்தியாவின் நேரடியான பங்களிப்பு இல்லா விட்டாலும் நிச்சயமாக மறைமுகமான பங்களிப்பு நிச்சயம் இருக்கும். இதனை எவரும் மறுக்கவும் முடியாது மறைக்கவும் முடியாது. இலங்கையில் முன்னெடுக்கப்படும் சிறிய நகர்வுகளிற்குக் கூட இந்தியாவிற்கு இலங்கை முக்கியத்துவம் அளிப்பதைக் காணமுடிகின்றது.

குறிப்பாக இலங்கையில் அடுத்த ஆண்டு தொடங்கும் மும்மொழித்திட்டம் அமுல் படுத்தப்பட உள்ள விழாவிற்கு இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும் இந்திய விஞ்ஞானியுமான அப்துல் கலாமிற்கு இலங்கை அழைப்பு விடுத்துள்ளது. இவ்விழாவில் மத்திய அமைச்சர் கபில் சிபல் அவர்களையும கலந்துகொள்ளுமாறு இலங்கை அழைப்பு விடுத்துள்ளது.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் குடியரசுத்தலைவர் அப்துல்கலாம் கலந்து கொள்வது சரியல்ல என சீமான் போன்றவர்கள் எதிர்க்க ஆரம்பித்துள்ளனர். ஆனால் எதிர்ப்புக்களை மீறி இவர்கள் இதில் கலந்து கொள்வதற்கான வாய்ப்புக்களே கூடுதலாக உள்ளது.

இது இவ்வாறு இருக்க இந்தியப் படையின் முன்னாள் இராணுவத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் அசோக் கே.மேத்தா, தமிழ் மக்களிற்கான அரசியல் தீர்வை இந்தியா பெற்றுக் கொடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார். இந்திய ஊடகமொன்றிற்கு அவர் எழுதியுள்ள பத்தியிலே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். தனது மூலோபாய பலன்களை நன்கு உணர்ந்துள்ள இந்தியா இலங்கைத்தீவில் இழந்த தனது அரசியல் செல்வாக்கினை சமப்படுத்து வதற்காக இலங்கையுடனான பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதில் முனைப்புக் காட்டுகின்றது. தமது மூலோபாய நலன்களிற்காக இந்தியாவில் தங்கியிருக்கவேண்டிய தேவை முடிபிற்கு வந்துள்ளதையிட்டு இலங்கை மகிழ்வுறுகின்றது.

விடுதலைப்புலிகளை அழிப்பதற்குரிய சீனாவின் இராணுவ மற்றும் அரசியல் ஆதரவு இலங்கையினால் பெரியளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு பொருளாதார முதலீடுகளையும் சீனா



பாரியளவில் முன்னெடுக்கின்றது. இந்தியாவின் வகிபாகத்திற்கு மாற்றான மூலோபாய பிரசன்னமாகவும் இலங்கையினால் சீனா பார்க்கப்படுகின்றது என அக் கட்டுரையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர் முடிவடைந்து நீண்டகாலமாகியுள்ள நிலையில் விடுதலைப்புலிகள் இல்லாத புறநிலையில் தமிழ் மக்களுக்குரிய அரசியல் அதிகார பரவலாக்கலை அரசாங்கம் இன்னமும் வழங்காது உள்ளது. இது விவகாரத்தில் நிறைவேற்றப்படாத பொறுப்பு ஒன்று இந்தியாவுக்குள்ளது. நிரந்தரப் பேச்சுவார்த்தைகளுக்கூடாக சமாதானத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் அரசியல் அதிகாரப் பரவலாக்கத்துடனான தீர்வினை ஏற்படுத்தும் பொறுப்பு இந்தியாவுக்கு உள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுக கட்டுமானம், கொழும்புத்துறைமுக நவீனப்படுத்தல், கொழும்பிலிருந்து காலிக்கான முதலாவது அதிவிரைவுப் பாதை உட்பட்ட இன்ன பிற அபிவிருத்தித் திட்டங்கள் ஊடாக இலங்கையில் சீனாவின் கை ஓங்கியுள்ளது. ஆனாலும் சீனா தமது நண்பன் என்றும் இந்தியா தமது சகோதரன் என்றும் ஜனாதிபதி கூறிவருகின்றார். ஏனையவர்கள கனிகளை பறித்துச்சென்ற போது இந்தியா துக்கத்தில் ஆழ்ந்து இருந்ததாக இந்திய ஆய்வாளர் ஒருவர் குறிப்பிட்டார். அத்தோடு இராணுவத்தீர்வு என்ற இலங்கையின் போக்கிற்கு ஆட்சேபனை தெரிவிக்காதது மட்டுமல்ல, அதற்குரிய ஆதரவினையும் இந்தியா வழங்கி இருநதது. இலங்கைத் தமிழர்களிற்குரிய அரசியல் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான நடவடிக்கைகளை புது டில்லி முன்னெடுக்கத்தவறுமாயின் அது மன்னிக்க முடியாததுஆகி விடும். இலங்கை இந்திய ஒப்பந்தம் போன்ற பொன்னான வாய்ப்பு இனி தமிழர்களிற்குக் கிடைக்காவிட்டாலும் கூட தமிழர் தரப்பு ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வு விரைவில் ஏற்படுவதறகான வாய்ப்புகள் தற்போது உருவாகி வருகின்றது. தற்போதைய அரசாங்கத்தின் இனப்பிரச்சினைக்கான நாடாளுமன்ற தெரிவுக்குழு கூட இந்திய அரசின் ஆசீர்வாதத்துடனேயே உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நாடாளுமன்ற தெரிவுககுழுகூட தமிழர்களிற்கு சாதகமாக அமையலாம். இதற்கு இதயசுத்தியுடன் தமிழர்தரப்பும் கரம் கோர்க்க வேண்டிய தேவை உள்ளது. இதை தமிழர்தரப்பு உணராவிட்டால் தமிழர்களிற்கு சாதகமான நிலை தோன்றாது..

**- த.கடலவன்**

# புகையிலை சார் உற்பத்திகள் தடை வர்த்தக நிறுவனங்களுக்கு பாராட்டு



(யாழ்ப்பாணம்)

புகையிலைப் பொருட்களால் ஏற்படும் தீமை காரணமாக யாழ்.மாவட்டத்தில் வாடிக்கையாளர்களுக்குப் புகையிலை சார்ந்த எந்தவிதமான உற்பத்திப் பொருள் விற்பனையிலும் ஈடுபடாத 33 நிறுவனங்களின் உரிமையாளர்கள் யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முற்பகல் 9.30 மணியளவில் யாழ். நூல் நிலைய மண்டபத்தில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்விலேயே இவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

புகையிலைசார் உற்பத்திப் பொருட்களினால் பொதுமக்களிடத்தில் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் ஒரு அங்கமாக யாழ். பிராந்தியத்திலுள்ள 11 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் தலா மூன்று நிறுவனங்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு சுமார் 33 பேருக்கு இவ்வாறு சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில், புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய சுகாதார சபையின் வெளியீடான "கமக்காரர்களின் சமூக பொருளாதார நிலையின் மீது புகையிலைப் பயிர்ச் செய்கைக்கு எதிராக மற்றும் பயிர்ச் செய்கையின் தாக்கம்" என்னும் நூல் நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், புகையிலை சார் உற்பத்திப் பொருட்களின் தாக்கம் குறித்து வைத்தியர் பிரசன்னாகூரேயும், புகையிலைச் செய்கைக்கு மாற்றீடாக ஏனைய பயிர்ச் செய்கை குறித்து வடமாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமாரும் கருத்துரையினை வழங்கினர்.

தொடர்ந்து வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.ஆர்.யூட் ஆகியோர் புகையிலை சார்ந்த உற்பத்திப் பொருட்கள் விற்பனையில் ஈடுபடாத நிறுவனங்களின் உரிமையாளர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தனர்.

தொடர்ந்து வரும் ஆண்டுகளில் புகையிலைச் செய்கைக்கு மாற்றீடாக ஏனைய வருமானம் ஈட்டக்கூடிய உணவு மற்றும் பொருட்களை விவசாயிகள் உற்பத்தி செய்வதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையை வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (பா)

# பள்ளி மாணவர்களுக்கு பரிசில் மக்கள் வங்கி புதிய திட்டம்

மக்கள் வங்கியில் மாணவர் மலர்ச்சிக் கணக்கு ஒன்றை ஆரம்பிக்கும் மாணவர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இக்கணக்கை 2012 ஜனவரி 8 ஆம் திகதி வரை ரூபா 5 ஆயிரம் வைப்பிலிட்டு ஆரம்பிக்கும் மாணவர்களுக்கு ஒரு தொப்பி, 200 ரூபா பெறுமதியான கொப்பிகள் மற்றும் சிசு உதான பாடசாலை புத்தகப் பை என்பன பரிசாக வழங்கப்பட்டு வருகிறது.

# டெங்கு காய்ச்சல் சிறுமி உயிரிழப்பு

டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் அனுமதிக்கப்பட கொண்டு வந்த குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று இரவு 10.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர் மன்னார் வங்காலைப் பகுதியைச் சேர்ந்த ஆன்துசானி (வயது-06) என்பவராவார். டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட இக்குழந்தை மேலதிக சிகிச்சைக்காக மன்னார் வைத்தியசாலையில் இருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வந்தவேளை வெளிநோயாளர் பிரிவில் உயிரிழந்துள்ளது. (எப்.எஸ்)

## இனங்களுக்கிடையில்.....

கூர்ந்து மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர், புதிய எதிர்ப்பார்ப்புக்களைக் கொண்ட மனிதர்களும் பொருளாதார மறுமலர்ச்சியும் இலங்கையில் காணக்கிடைத்ததாக தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராக சர்வதேச ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வந்த அநேக குற்றச்சாட்டுக்களுக்கு, கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை சிறந்த பாடமாக அமையும்.

இலங்கையில் உள்நாட்டு பிரச்சினையை தீர்த்துக் கொள் வதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு வாய்ப்பளிக்க வேண்டும். அன்னியத் தரப்புக்கள் அதற்கு உதவியை மட்டுமே புரிய வேண்டும்.

30 வருட கால பயங்கரவாத யுத்தம் நிறைவுபெற்று அபிவிருத்தி பாதையில் செல்லும் இலங்கைக்கு கைகொடுத்து உதவுவது சர்வதேசத்தின் பொறுப்பாகும். தமிழ், முஸ்லிம் மக்களே பயங்கரவாதத்தால் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்தும் பிரிவினை வாதத்தின் பின்னால் செல்லாமல் உலகெங்கும் வாழும் முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களும் ஏனைய தரப்பினரும் இலங்கையில் கட்டியெழுப்பப்பட்டு வரும் நல்லிணக்கத்திற்கு பக்கபலமாக செயற்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

## சகல கட்சிகளும்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு பகிரங்கமான அழைப்பை விடுக்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

இதனிடையே நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை மொழிபெயர்க்கப்பட்டதன் பின்னர் அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அதேவேளை அதுதொடர்பில் விவாதிக்கப்படுவதுடன் சேர்க்கப்பட வேண்டிய சில சிபார்சுகளும் இணைக் கப்படுமெனவும் குறிப்பாக இவ்வறிக்கை தொடர்பில் ஜனாதிபதி மிகுந்த அக்கறையுடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தி அழிவிலிருந்து முன்னேற்றம் காணும் அதேவேளை இன் றுள்ள சூழலைப் பாதுகாப்பதுடன் சிறைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பிலும் நாம் மிகுந்த கவனம் செலுத்தியுள்ள அதேவேளை கிடைப்பதை பெற்றுக் கொண்டு, அதனைப் பாதுகாத்தலே முக்கியமானது என்றும் தெரிவித்தார்.

அரசுடன் பல சுற்றுப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ள போதி லும் அரசின் மீது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பிக்கை யீனத்துடனேயே நடந்து கொள்கின்றது. இதை விடுத்து அரசின் மீது நம்பிக்கை வைக்கின்ற போதே எதுவும் சாத்தியமாகும். தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒரே தளத்தில் நின்று நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை எவ்வாறு நிரந்தர அரசியல் தீர்வுக்காக பயன்படுத்தலாம் எனச் சிந்திக்க வேண்டும். இதன் மூலமே தமிழ் மக்களின் நலன்களையும் பாதுகாப்பையும் உறுதி செய்ய முடியுமெனவும் உறுதிபடத் தெரிவித்தார்.

நேற்றைய ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே ஊடகங்களுக்கான அறிக்கை யொன்றையும் அமைச்சர் வெளியிட்டார்.

## மனித உரிமைமீறல்...

மாற்றியமைக்கிறது. இவ்வாறு மாற்றியமைக்கப்படுவதால் பொது மக்களே பெரிதும் பாதிக் கப்படுகிறார்கள். இது நாட்டின் எதிர்காலத்தை பாதிக்கும் ஒரு செயற்பாடாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மனித உரிமைகள் தினமான கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் கலந்துகொள்ளச் சென்ற இரண்டு இளைஞர்கள் இனந்தெரியாதோரால் கடத்திச்செல்லப்பட்டார்கள். இவ்வாறான மனித உரிமைமீறல் செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றவண்ணமே உள்ளன. அரசாங்கம் இதனைக் கட்டுப்படுத்தி நாட்டில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்காத பட்சத்தில் சர்வதேசம் நேரடியாக இலங்கைக்குள் தலையிடும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. இது மிகவும் அபாயகரமான ஒன்றாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சர்வதேச...

புத்திசாலித்தனமாக எதிர்கொள்ள வேண்டும். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான தேசிய ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகும் வரை மேற்படி தீய சக்திகள் இலங்கையை அவதானித்துக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் நவநீதம் பிள்ளையை நாட்டிற்குள் அனுமதிக்க கூடாது.

பான் கீ மூனும் நவநீதம் பிள்ளையும் தான் தற்போது இலங்கையை மண்டியிட வைக்க சரியான கால நேரத்தை எதிர்பார்த்துக் கொண் டிருக்கின்றனர். இலங்கைக்கு போதுமான படைப் பலமும் இயற்கை வளங்களும் உள்ளன.

எனவே மேற்குலக நாடுகளில் தங்கியிருக்கும் தேவை இலங்கைக்கு கிடையாது.

ஆகவே இலங்கை அரசு நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி செயற்பட வேண்டும். குறிப்பாக இலங்கைக்கு எதிராக செயற்படுபவர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

## குடிமக்களின்...

தெரிவித்தார்.

நாட்டில் உள்ள அனைத்துக் குடிமக்கள் பற்றிய துல்லியமான விபரங்களை திரட்டுவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். ஒருமாதக் குழந்தை கூட இந்த விபரத்தில் உள்ளடக்கப்படும்.

இந்த முறைமை தனிப்பட்ட விபரங்களை மட்டும் கொண்டதல்ல. இடம்சார் தகவல்களையும் குறிப்பாக, ஒவ்வொருவரினதும் வசிப்பிடத்தைக் காட்டும் செயற்கைக்கோள் படத்துடன் கூடிய தகவல்களையும் கொண்டிருக்கும்.

தனிப்பட்ட விபரங்கள், குடும்பப் பின்னணி, வீடு பற்றிய விபரங்கள், செயற்கைக்கோள் படங்கள் மட்டுமன்றி மின்சாரம், வீதி வலையமைப்பு, குடிநீர், கழிவுநீர் அகற்றும் வசதிகள் போன்றவற்றை உள்ளடக்கியதாகவும் இந்தத் தகவல் திரட்டு அமையவுள்ளது.

இந்த விபரங்களை திரட்டுவதற்கு களனி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 140 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் சிந்தனையில் உருவாக்கப்பட்ட இந்தத் திட்டம் கம்பகா மாவட்டத்தில் முதலில் நடைமுறைப்படுத்தப்படும்.

உயர்மட்ட அனுமதி கிடைத்துள்ளதால் விரைவில் ஏனைய மாவட்டங்களிலும் தகவல் திரட்டும் பணி மேற்கொள்ளப்படும்.இந்தத் திட்டம் நிறைவடைந்ததும், திரட்டப்பட்ட தகவல்கள் முக்கியமான அரசாங்க நிறுவனங்களுக்கும், ஏனைய இராணுவ அமைப்புகளுக்கும், நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கும் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## மதகுருவுக்கு...

மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் பிரிவினைவாதத்தை மீண்டும் ஏற்படுத்த முயன்றால் அதை அனுமதிக்க முடியாது. பிரிவினைவாதம், இனவாதம், சமய வாதத்தை கத்தோலிக்க திருச்சபை முற்றாக நிராகரிக்கிறது. தற்போது தேவைப்படுவது இன, மத பேதமில்லாமல் எல்லோரும் ஒன்று சேர்ந்து தமிழ் மக்களை அரசியல் தீர்வொன்றுக்கு இட்டுச்செல்வதினூடாக தமிழ் மக்களை வெளிநாட்டுச் சூழ்ச்சிகளிலிருந்து காப்பாற்றுவதாகும் என மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## கனேடிய...

தொடர்பாக விசேடமாக ஆராயப்பட்டதாக யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தெரிவித்தார்.

யாழ்.மக்களின் தேவைகள், எதிர்பார்ப்புக்கள் தொடர்பாக நேரில் ஆராய யாழ்ப்பாணம் வந்துள்ளதாக இலங்கைக்கான கனேடிய வதிவிடப்பிரதிநிதிகள் ஊடகங்களுக்கு தெரிவித்தனர்.



# கனேடிய பொருளாதார ஆலோசகர் அரச அதிபருடன் கலந்துரையாடல்

### பிரான்ஸ் தூதுவரும் பங்கேற்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான பிரான்ஸ் நாட்டின் உயர்ஸ்தானிகர் மற்றும் கனடா நாட்டின் அரசியல் பொருளாதார ஆலோசகர் ஆகியோர் நேற்று யாழ். அரச அதிபரைச் சந்தித்து யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர்.

பிரான்ஸ் நாட்டின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் எச்.ஈ.சார்ஸ் தினிரோவிச்சோன், கனடாவின் அரசியல் பொருளாதார ஆலோசகர் பிறின்பிராஸ் கோல்ட்டல் ஆகியோரே நேற்றைய தினம் யாழ். அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

நேற்று நண்பகல் 12.00 மணி தொடக்கம் 1.30 மணிவரை யாழ். கிறீன் கிறாஸ் ஹோட்டலில் கனடா நாட்டின் அரசியல் பொருளாதார ஆலோசகருடனும், பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். செயலகத்தில் பிரான்ஸ் உயர்ஸ்தானிகருடனும் குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்புக்களின்போது யாழ். அரச அதிபரினால் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. (பா)

# யுவதி மீதான சேஷ்டை முயற்சி நொருங்கின வீட்டு உபகரணங்கள்

(யாழ்ப்பாணம்)

வீதியில் நின்ற யுவதி மீது துவிச்சக்கர வண்டியில் சென்ற இளைஞர் மோதியதன் விளைவால் இரண்டு வீடுகளிலிருந்த பொருட்கள் அடித்து நொருக்கப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று மாலை யாழ். நாயன்மார்க்கட்டு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த ஞாயிற்றுக்கிழமை வீதியோரமாக நின்ற பெண் மீது இளைஞர் ஒருவர் தனது துவிச்சக்கர வண்டி மூலம் மோதி சேஷ்டை புரிய முற்பட்டுள்ளார்.

இது தொடர்பாக யுவதி தனது உறவினரிடம் முறையிடவே அவ்விளைஞனின் வீட்டுக்கு சென்ற உறவினர்கள் வீட்டினுள் உட்புகுந்து தொலைக்காட்சி, வானொலி உட்பட பெறுமதியான பொருட்களை அடித்து நொருக்கி விட்டுச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தினால் ஆத்திரமடைந்த இளைஞனின் உறவினர்கள் அதற்குப் பதிலடியாக குறித்த பெண் இருந்த வீட்டில் உட்புகுந்து அதிரடித் தாக்குதல் நடத்தி அங்கிருந்த பெறுமதியான பொருட்களை சேதப்படுத்தியுள்ளனர்.

இவ்விரு குடும்பத்தினரும் ஏட்டிக்குப் போட்டியாக பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளனர். (எப்.எஸ்)

# அகதிகள் நாடு கடத்தலை எதிர்த்து ஆஸியில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இரு இலங்கை அகதிகள் நாடு கடத்தப்படுவதை நிறுத்துமாறு கோரி அவுஸ்ரேலிய பேர்த் விமான நிலையத்தில் உள்ள அகதிகள் முகாம் இலங்கையர்கள் சிலர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த அகதிகள் முகாமில் இருந்து வெளியே சென்ற காரில் இலங்கையர் ஒருவர் ஏற்றிச் செல்லப்படுவதாகத் தெரிவித்து அக்காரை சுற்றிவளைத்து இலங்கை தமிழ் அகதிகள் இவ்வாறு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும் அந்தக் காருக்குள் மனநிலை குன்றிய ஒருவரே இருந்ததாக அவுஸ்ரேலிய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். குறித்த காரை 12 பேர் அடங்கிய குழுவொன்று மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக அகதிகள் உரிமை செயற்பாட்டு வலையமைப்பின் பேச்சாளர் எலெக்ஸிஸ் வெஸிலி தெரிவித்தார்.

முகாமில் இருந்து இரு இலங்கையர்கள் நேற்று அழைத்துச் செல்லப்பட்டு இன்று பேர்த் விமான நிலையத்தில் இருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளதாகவும், அவ்வாறு அனுப்பினால் அது அவர்களுக்கு ஆபத்து எனவும் எலெக்ஸிஸ் வெஸிலி குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் திருப்பி அனுப்பப்படவிருந்த ஒரு இலங்கைத் தமிழரை திருப்பி அனுப்பக்கூடாதென அவுஸ்ரேலிய மேல் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளதை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று பகல் வேளையிலேயே தெரிந்து கொண்டதாக எலெக்ஸிஸ் வெஸிலி சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு இலங்கை அகதி ஒருவரை திருப்பி அனுப்பக்கூடாதென நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளதை அவுஸ்ரேலிய குடிவரவு அதிகாரி ஒருவரும் உறுதி செய்துள்ளார்.

இதனை அறியாத அகதிகள் பொறுப்பற்ற வகையில் மனநிலை குன்றிய ஒருவரை ஏற்றிச் சென்ற காரை வழிமறித்து ஆர்ப்பாட்டம் செய்ததாக அந்த குடிவரவு அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

# தாமரைத் தடாகம் அங்குரார்ப்பணம்

(கொழும்பு)

தாமரைத் தடாகம் மகிந்த ராஜபக்ஷ கலையரங்கின் உத்தியோகபூர்வ இணையதளம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற நிகழ்வில், இந்தப் புதிய இணையதளம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய www.lotuspond.lk என்ற இணையதளத்தினைப் பார்வையிடுவதன் மூலம் தாமரை தடாகம் மகிந்த ராஜபக்ஷ கலையரங்கு தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

சிந்தனையளவில் மட்டுப்படுத்தப்பட்டிருந்த கலையரங்கை செயல்வடிவத்துக்கு மாற்ற ஜனாதிபதிக்கு முடிந்துள்ளதாக நிகழ்வின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க குறிப்பிட்டார்.

# கட்சியின் முக்கிய பதவிகள் ஆராயவுள்ளது ஐ.தே.க.

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவின் விசேட கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிகள் குறித்து மிக ஆழமாகக் கலந்துரையாடப்படும் என அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்கான வாக்கெடுப்பை நடத்துதல் மற்றும் ஏனைய பதவிகளுக்கு நபர்களை நியமித்தல் ஆகியவை தொடர்பில் இக்கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்படவுள்ளது.

இவ்விகாரங்கள் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் ஆலோசனைக் குழு இன்று ஆராயவுள்ளதாகவும் இவ்வட்டாரங்கள் குறிப்பிட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆலோசனைக் குழுவின் கூட்டத்தில் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, இணைப் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் அக்கட்சியின் தவிசாளர் காமினி ஜயவிக்ரம பெரேரா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

## விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வண்டி வீதியோரமாக இருந்த குழியில் தவறி வீழ்ந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று இரவு 9.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலிப் பகுதியைச் சேர்ந்த ஐ.பிரபாகரன் (வயது - 41), செல்வகுமாரி (வயது - 33), பி.கிருத்திகா (வயது - 12) என்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்தோரே காயமடைந்தவர்களாவர். (எப்.எஸ்)

## குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

குடும்பப் பிரச்சினை காரணமாக தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட குடும்பஸ்தரது சடலம் சாவகச்சேரி பொலிஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

கைதடி மேற்குப் பகுதியைச் சேர்ந்த முத்துவேலு ரவி (வயது - 37) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் மாலை ஒப்படைக்கப்பட்டது. (எப்.எஸ்)


# தமிழ்மொழி மூல பொலிஸார் வடக்கு, கிழக்கில் நியமனம்

### இன ஒருமைப்பாட்டை வளர்க்க ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழி மூலம் பணியாற்றக்கூடிய 350 பொலிஸ் கான்ஸ்டபிள்களை நியமிக்க உள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தமிழ் மொழி மூலம் சிறப்பாக பணியாற்றக்கூடிய ஆற்றலுள்ள தமிழ், முஸ்லிம், சிங்களம் உட்பட எந்தவொரு இனத்தை சேர்ந்தவரும் இதற்காக விண்ணப்பிக்க முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.



இப்பிரதேசங்களில் வசிக்கக்கூடிய தமிழ் பேசும் மக்கள் தமது தேவைகளுக்காக பொலிஸ் நிலையம் சென்று அவர்களது மொழிகளிலேயே தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் உரிமையை உறுதிப்படுத்துவதற்காகவே அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கணவரை காணவில்லை மனைவி முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கடந்த 9 ஆம் திகதியன்று கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த குகன் முருகானந்தன் (வயது - 36) என்பவர் தொடர்பாக அவரது மனைவி நேற்றுக்காலை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்ததாக ஆணைக்குழுவின் இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

சம்பவ தினத்தன்று தனது கணவர் நண்பர் ஒருவருடன் வெளியூருக்குச் செல்வதாக தம்மிடம் கூறியதாகவும் அவருக்கு எதுவித அரசியல் கட்சியுடனோ, அமைப்புடனோ சம்பந்தமில்லை எனவும், சாதாரண வாகன சாரதி தான் என் குறித்த நபரின் மனைவி தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

கடத்தப்பட்டதாகக் கூறப்படும் நபருக்கு ஒரு பிள்ளை உள்ளமை குறிப்பிடத்தக்கது. (எப்.எஸ்)

# உணவு நஞ்சானதால் சீன தொழிலாளர் மயக்கம்

(யாழ்ப்பாணம்)

இரவு உணவு விஷமானதால் கட்டடப் பணிக்கென வந்திருந்த சீனப் பணியாளர்கள் நால்வர் மயக்கமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று இரவு 11.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சீன தனியார் நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த ஒகானா சூ (வயது - 29), லை யூ (வயது - 28), ஜீயூ (வயது - 23), ஒபாமா (வயது - 24) என்பவரே மயக்கமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

இரவு சமையலுக்காக மரம் ஒன்றிலிருந்த காளான் வகை தாவரத்தை சமைத்து உண்டதனால் அது நஞ்சானதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எப்.எஸ்)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 டிசம்பர் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.